www.padippakam.com

# மனித உரிமையும்
# எமது போராட்டமும்

வெளியீடு 1.

(வெளியிட்ட திகதி : 15.பங்குனி.1993)

மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

இலங்கை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமையும் எமது போராட்டமும்

**வெளியீடு 1.**

மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளடக்கம்

பக்கம்

முகவுரை ........................................................ i

போராட்டமும் அதன் மூலகாரணமும் திசை திருப்பமும் ...............1

தமிழர் போராட்டத்தில் விடுதலையும் மனித உரிமைகளும்...... 19

விடுதலைப் போராட்டம் பற்றி ........................................ 23

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)........................................................ 26

வரலாற்றுப் பார்வையில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்.) ................................................29

தமிழரின் எதிர்காலமும் மனிதஉரிமைகளின் முக்கியத்துவமும் ..33

படிப்பகம்

www.padippakam.com

# முகவுரை

இலங்கையில் உள்ள தமிழ்ச்சமுதாயம் ஆபத்தான கட்டத்தில் இருக்கும் நேரத்தில் இத் தொடர் கட்டுரை வெளிவருகின்றது. அரசியலில் இனவாதம் மேலோங்கியமையால் விளைந்த வன்செயல் களில் இருந்து, இலங்கையில் வாழ்ந்த எந்த சமுதாயப்பிரிவினரும் தப்பவில்லை என கடந்த காலசம்பவங்கள் எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. 1990 ஆனி யுத்தத்தின் விளைவாக மட்டும், பத்தா யிரம் பொதுமக்களும் இரண்டாயிரம் ஆயுதம் தாங்கியோரும் உயிரிழந்துள்ளனர். இப்பொது மக்களுள் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆயுதம் தாங்கியோரில் பலர் சிறுவர்கள் என்பது வேதனைக்குரியதாகும். ஒப்பீட்டளவில் கிழக்கு மாகாண மக்கள் அனுபவித்த துன்பங்கள் வடக்கு மாகாண மக்க ளில் இருந்து வித்தியாசமானதாகும். கிழக்கு மாகாணத்திலேயே உயிர்ச்சேதம் அதிகம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப் பாண மக்கள் மனநோய், பட்டினி, விமானத்தாக்குதல் போன்ற பல்வேறுபட்ட இன்னல்களை அனுப வித்து இருக்கிறார்கள். 1987ல் இரு பயங்கர விமானத் தாக்குதல்களுக்குள் வாழ்ந்ததன் பின்பு, எதிர்காலம் பற்றி கனவுகள் எதுவுமில்லாமல், தாம் அனுபவித்த சூழ்நிலையை நினைத்து ஏங்கிக்கொண்டு, நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், இலங்கை இராணுவம் மெதுவாக முன்னேறிக்கொண்டு வருகின்றது.

இன்றைய போர் அதிக இழப்புக்களைத் தந்தாலும், பலரது பார்வையில் ஒரு சாதாரண விடயமாகி விட்டது. வெளிநாட்டுப் பத்திரிகை யாளர்கள் பல சம்பவங்களைக் கண்டுகொள்வதேயில்லை. மக்களைப் பொறுத்தவரையில், முன்னைய தீவிர உணர்வுகள் ஓய்ந்து, நடப்பவை நடக்கட்டும் என்ற விட்டேந்தியான ஒருநிலை நிலவுகிறது. இந் நிலையை பல வெளிநாட்டுக்காரர்களே அவதா னித்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஊர்காவற்றுறையில் இராணுவ



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரிகளைக் கொன்றிருக்கும் குண்டுவெடிப்புச் சம்பவம் பற்றிக் கூட, மக்கள் ஆர்வம் இல்லாமல் பேசியது, அச்சமயம் தீவின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்த இரு ஸ்கன்டிநேவியர்களைக்கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. வெற்றி என்ற சொல் மக்களின் எண்ணத்திலிருந்து மறைந்துவிட்டதுபோலும். குண்டு வெடிப்புச் சம்பவத்தில், தெற்கில் ஏற்பட்ட கோபம் கூட அரசின் மீதே இருந்தது. சிங்கள மக்களிடம் போருக்கு இருந்த ஆதரவு பெருமளவுக்கு குறைந்துவிட்டதை, அண்மையில் “ராவய” என்ற சிங்கள வார இதழ் நடாத்திய அபிப்பிராய வாக்கெடுப்பு காட்டுகின்றது.

சிங்கள இனவாதத்தின் நேரடி விளைவுகளால் வந்த ஜே.வி.பி குழப்பத்தின் போது, அதிகளவிலான சிங்களமக்கள் உயிரிழந்தார்கள். இது, சிங்கள மக்களை திகைப்புக்குள்ளாக்கியதுடன் விழிப்படையவும் செய்தது எனலாம். இந்த சோக சம்பவங்களின் மூலம் ஒரு புறத்தில் புத்திஜீவிகளும், மறுபுறத்தில் சமூகநல ஈடுபாடு கொண்டோரும் அனுபவ முதிர்சியடைந்தனர் எனலாம். இப்பயணம் இருபது வருடங்களுக்கு மேல் நீடித்தது. இவர்களில் பலர் சிங்களக் கிராமப் புறத்தில் வளர்ந்தவர்கள். இப்படிப்பட்ட இடத்திலேயே, தற்பெருமை பிடித்த மேல்மட்டத்திலுள்ளவர்கள் முன்வைத்த சிங்கள இனவாதத்தை மக்கள் விசுவாசமாக ஏற்றுக்கொண்டனர். இரத்தபலியை வேண்டி நிற்கும் கொள்கைகளுக்கு இனியொருபோதும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்ற நிலைமை தற்போது சிறிதளவு பரவலாக நிலை கொண் டுள்ளது. இதே போன்ற உணர்வே இன்று சாதாரண மக்கள் மத்தியிலும் உண்டு என்பதில் ஐயமில்லை. இன்றைய சூழ் நிலையில் தமிழ் மக்களுக்கும் பேச்சுச்சுதந்திரம், கருத்துச் சுதந் திரம் இருந்திருக்குமேயானால், இத்தகைய உணர்வுகளை மேலும் வெளிப் படுத்தியிருப்பார்கள்.

வெளிநாடுகளில் வசிக்கும் யுகோசிலாவிய நாட்டவர்கள், தமது நாட்டில் நடப்பவை பற்றி இன்று எப்படி ஒரு கண்மூடித்தனமான ஆத ரவை வழங்கி வருகின்றார்களோ அதே போன்று எண்பதுகளின்



படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பங்களில், வெளிநாடுகளில் வாழ்ந்த இலங்கையரும் கண் மூடித்தனமான ஆதரவை வழங்கினார்கள். இவ் ஆதரவு எவ்வளவோ குறைந்து வருகின்றது. சர்வதேச மேடைகளிலும், ஒலிபரப்பு அரங்குகளிலும் துட்டகைமுனுவும், எல்லாளனும் போட்டி யிடுவது இல்லாமலே போய்விட்டது. சிங்கள பாதுகாப்பு முன்னணிகளும், தமிழ் பாதுகாப்பு முன்னணிகளும் பொழுது போக்கு அரங்குகளாக மாறிவிட்டது.

மேலோங்கி நிற்கும் தமிழ் இனவாதப் போக்கின், அமெரிக்கா வாழ் தமிழ் ஆதரவாளர்கள், கலிபோர்ணியாவில் 1991ன் நடுப்பகுதியில் ஒரு மகாநாட்டை ஒழுங்கு செய்தனர். இம் மகாநாட்டின் நிகழ்ச்சிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும், பலரிடம் எதிர்ப்புக் கருத்துக்கள் இருப்பதை எப்படியோ தெரிந்து கொண்டு, தமக்கு சாதகமான யோசனைகளைக்கூட முன் வைக்காமல் பின்வாங்கினர். இம் மகாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக, இலங்கைத் தூதராலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட முயற்சிகள், சிங்கள மக்கள் மத்தியில் கூட ஆதரவைப் பெறவில்லை.

இன்று வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் இலங்கையில் உள்ள தம்மினத்தவர் எதிர் நோக்கும் ஆபத்துக்களை மனச்சங்கடத்துடன் அறிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக்கூறிக் கொள்ளும் இயக்கம், மக்களின் உயிர்களையாவது காப்பாற்றும் என்ற நம்பிக்கையைக் கொடுத் திருந்தால், சகல மக்களும் தங்களுக்குள் இருக்கும் வித்தியாசங்களை மறந்து இவ்வியக்கத்துக்கு ஆதரவு கொடுத்திருப்பார்கள். ஆனால் இன்று நாம் காணும் நிலைமை அதுவல்ல. வெளிநாடுகளில் இருந்து வெளிவரும் தரமான, சுதந்திரமான தமிழ்ப்பிரசுரங்களில் கிட்டத்தட்ட எல்லாமே புலிகள் மீது கடுமையான விமர்சனத்தையே முன்வைக்கின்றன. லண்டனில் தொட ர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக வெளிவரும் "தமிழ் ரைம்ஸ்" என்ற ஆங்கில ஏடு மனித உரிமைகளுக்கும், இனவாதத்திற்கு எதிரான கருத்துக்களுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

முதன்மைகொடுத்து வருகின்றது. மேற்கு நாடுகளில் இருந்து வெளி வரும் பல சஞ்சிகைகளில் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொண்ட, அல்லது போராட்டத்தின் விளைவுகளை நேரடியாக அனுபவித்தவர்களின் பங்களிப்புகள் பெரும்பான்மையாக உள்ளது. இவற்றுள் முக்கியமாக தாயகம், மனிதம், தூண்டில், சுவடுகள், அஆஇ, என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் எழுதுபவர்களின் அனுபவங்களினால் இவ் ஆக்கங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. பலகாலமாக இரகசியமாகச் சொல்லப்பட்ட விடயங்களும், தொடர்ந்து இருபது வருடங்களாக மறைக்கப்பட்ட விடயங்களும் தற்போது வெளிவருகின்றன. துரோகி என முத்திரை குத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பாடசாலை அதிபருமான தியாகராஜா ஆகியோரின் கொலைச்சம்பவங்களும், தமிழ்க் கட்சிகள் மேடையில் கக்கிய இனவாதமும், இன்று ஆராயப் படுவது அவதானிக்கத்தக்கது. இச் சம்பவங்கள் விடுதலைக்கு வழிகாட்டினவா? அல்லது இன்றைய மனிதஉரிமை மீறல்களுக்கும், பயங்கரவாதங்களுக்கும் வழிசமைத் தனவா? என்ற நியாயமான கேள்விகள் எழுப்பப்பட்டிருப்பது குறிப் பிடக்கூடிய அம்சமாகும். போராட்டத்தில் தங்களது பங்களிப்புகள் வேதனையான முறையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பல இயக்கங்களைச் சேர்ந்த போராளிகள், வெளிநாடுகளில் நம்பிக்கை இழந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய போராட்டம் பற்றிய சிந்தனை மிக்க ஆக்கங்களை வெளியிடுவதில் முன்னோடியாக இருந்தது "தீப்பொறி" அமைப்பேயாகும். இவ்வமைப்பு 1985ல் வெளியிட்ட "புதியதோர் உலகம்" என்ற நூல் மூலம் "புளட்" இயக்கத்துக்குள் நடந்த உள் அழிவுகளை வெளிக்கொணர்ந்தார்கள். பயங்கரவாதத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பது சாதாரண விடயமல்ல என்பது, தீப்பொறி இயக்கத்தினர் புளட் இயக்கத்திடம் இருந்தும் பின்னர் புலி இயக்கத் திடம் இருந்தும் எதிர்கொண்ட துயரங்கள் நிரூபித்திருக்கின்றன. இவர்களுக்கு நேர்ந்தவை ஒன்றும் ஆச்சரியத்துக்குரியவையல்ல.



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய பயங்கரவாதத்திற்கு முகம் கொடுத்து, வெளிப் படையாகக் கொடுமைகளை எதிர்க்கக் கூடியவர்கள், பெரும்பான்மையாக நடுத்தர வர்க்கத்திடமிருந்து தோன்ற வேண்டுமென்பதில்லை. ஆனால் தங்களை ஒழுங்கமைக்கவும், அர்ப்பணித்துக் கொள்ளவும் கூடிய மனப்பக்குவமுடையவர்களிலிருந்து தோன்றும்.

பல காரணங்களால் தெளிவான அரசியல் பார்வை உடையவர்களும், பழைய போராளிகளும் புதியதோர் உலகம் வெளிவந்ததிலிருந்து அண்மைக்காலம் வரை மௌனமாகவே இருந்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட இளைஞர்களில் பலர் தமது அனுபவங்களுக்கும், கருத்துக்களுக்கும் அர்த்தம் இருப்பதாக நம்புகிறார்கள். மனிதாபிமானமும் விடுதலையும் கொண்ட சமுதாயத்தைக் கட்டி யெழுப்புவதற்கு தமது பங்களிப்பு தேவைப்படும் என்பதையும் நம்புகின்றார்கள். இவர்களிடம் புதிதாகத் துளிர் விட்ட தன்னம்பிக்கைகளை ஆரோக்கிய மான சமுதாயத்தை உருவாக்கு வதற்கான அறிகுறியாக எடுத்துக் கொள்ளலாம். கொலைவெறிக்குள்ளும், துரோகத்திற்குள்ளும் சிக்கி யிருக்கும் நியாயமான போராட்டத்திற்கும், இச்சூழலுக்குள் அகப்பட்டிருக்கும் மக்களின் துயரங்களுக்கும், போரிற்கு செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட பிள்ளைகளிற்கும் போரில் வரும் வெற்றி தோல்வி மூலம் தீர்வுகாண முடியாதென்ற அபிப்பிராயமே இன்று பரவலாக நிலவுகின்றது. நியாயமான, நிதானமான, பொறுப்பு வாய்ந்த சமுதாய அமைப்பை உறுதிப்படுத்துவதன் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். இப்படியான நெறிமுறைகளே, வெறுமனே போர் இயந்திரங்களாக மாறியுள்ளோரை செயலிழக்கச் செய்யக்கூடிய சக்திகளை உருவாக்க உதவும்.

ஒரு விடுதலைப் போராட்டமானது மக்கள் எதிர்நோக்கும் உளவியல் சமூகவியல் ஒடுக்குமுறைகளில் இருந்து அவர்களை முற்றாக விடுவிப்பதன் மூலமே வலிமையான சக்தியைப் பெறுகின்றது. அதாவது, போராட்டமானது சாதாரண மக்களையும் அவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தத் தூண்டுமளவிற்கு பாரியதாக அமைய



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும். போராட்டமானது வெற்றி பெறுவதற்கு, மனித உரிமைகளை உயிரோட்டமான சக்தியாகக் கருதுவது இன்றியமையா ததாகும். இதன் உண்மையான அர்த்தம் சகல மக்களையும் கூட்டாகவும், தனிப்பட்டமுறையிலும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நெறிகளினால் பலப்படுத்துவதேயாகும். கருத்துக் களை பரிமாறிக்கொள்ளும் சுதந்திரமும் இவற்றோடு சம்பந்தப்பட்ட விவாதங்களும் முக்கிய அம்சங்களாகும். இன்று எமது சிறுபிள்ளை களின் திறமைகளை வளர்ப்பதற்கு வழிவகுக்காமல், அவர்களை எவ்வாறு மூளைச்சலவை செய்து சாவுக்கு அனுப்பலாம் என்பதே தீவிரமாக ஆராயப் படுகின்றது. இவ்வாறு வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தின் ஆற்றல்களை நாசப்படுத்தும் போது நாம் முற்றாக நமது பாதையைவிட்டு விலகிவிடுகிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இலங்கை அரசு, அரசியல் விடுதலைக்கும் மனிதஉரிமைகளுக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும் என்பதை அது சிங்களமக்களை நடாத்திய விதத்திலிருந்து அறியலாம். ஆதிக்கவெறி கொண்டோர் மக்களையே கொலையும், கொள்ளையும் செய்யத்தூண்டினர். தமது குற்றங்களை மறைப்பதற்கு இவ்விதமான தந்திரமான போக்கை தொடர்ந்தும் கையாளமுடியாது என நிர்பந்திக்கப்பட்ட போது சிங்களமக்களையே கொன்று குவித்தது.

ஒரு விடுதலைப்போராட்டமானது மக்களைப் பலப்படுத்துவதிலிருந்து விலகி, சில தனிப்பட்டோரினது அதிகாரவெறியினால் திசை திருப்பப்படும் போது, பயங்கரவாதமே அதன் பிரதான ஆயுதமாகிறது. இப்படிப்பட்ட நிலையில் தான் அரச படைகள் வெற்றியடையக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. இதனால் அடக்கு முறையாளர்கள் மேலும் வன்முறை அரசியலுக்குத் தள்ளப்படுவார்கள். இக்கட்டங்களில் பொதுமக்கள் நம்பிக்கையிழந்திருப்பார்கள். போராட்டத்தின் முழுப் பலமும் அடக்குமுறையாளர்களின் கைகளில் இருக்கும் போது வெற்றிவரும் எனத் தோன்றும்நேரத்திலேயே திடீரென தோல்வியும்



படிப்பகம்

வரக்கூடும். இதுவே ஜே வி. பி இனருக்கு நடந்தது. ஆளும் அரசில் முழுநம்பிக்கையையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடிய ஒரு எதிர்க்கட்சியாவது இல்லாத சமயத்தில், மக்களின் துயரங்களுக்கு முடிவே இல்லை. பஞ்சாப்பில் தற்போதிருக்கும் நிலைமையும், பெரு நாட்டில் ஒளிரும் பாதை இயக்கத்தின் தலைவரான அபிமேல் குஸ்மான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வந்த நிலைமையும் எமக்கு ஒரு நல்ல பாடமாகும். மாறாக நிக்ரகுவா போன்ற வெற்றியடைந்த போராட்டங்கள் பெரிய அளவில் மனிதஉரிமைகளையும், மக்களின் அடிப்படை உரிமை களையும் மதித்திருந்தன.

பிரதானமாக, தமிழ் வாசகர்களுக்காக வெளியிடப்படும் இத் தொடர் கட்டுரை, மனித உரிமைகளுடனும், விடுதலையுடனும் தொடர்பு பட்ட விடயங்களை, எமது அனுபவங்களினதும் அறிக்கைகளினதும் அடிப்படையில் வெளியிட உத்தேசித்துள்ளோம். நாம் கடந்தகால வர லாறுகளை விளங்கிக்கொள்ளும் போது, எமது அனுபவங்களில் வெளிவந்த பெறுமதியான நிகழ்வுகளையும், பேரழிவுகளையும், இதன் மூலம் அரசியல் கற்றுத்தந்த பாடங்களையும் மனதில் வைத்திருக்க வேண்டும்.

சிறீலங்கா அரசின் அடக்கு முறைகளும், அதன் விளைவாக, சிங்கள, தமிழ், மக்கள் அனுபவித்த அழிவுகள் பெரிய அளவில் எழுத்திலிடப்பட்டு ஆராயப்பட்டிருக்கின்றன. இதில் எமது அறிக்கை களுக்கும் பங்குண்டு. இதே போல இந்திய அரசின் தன்மைகளும், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டமையால் வந்த அழிவுச் சம்பவங்களும் எமது அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன. இதன் விளைவுகளை நாம் மட்டுமல்ல இந்தியர்களும் பல வருடங்க ளுக்கு அனுபவிப்பார்கள். நாம் இதுவரை அனுபவித்த துயர வரலாறுகளுக்கு எல்லாத் தமிழ் மக்களுமே பொறுப்பானவர்களாக இருக்கின்றோம். எமது சமுதாயத்தின் பலவீனமான பிரிவினரின் துன்பங்களைக் கண்டுகொள்ளாமலே இருந்திருக்கின்றோம். அவர்க

www.padippakam.com

ளைப் பாதுகாப்பதற்கு முயற்சிக்கவில்லை என்பது மட்டுமின்றி தொடர்ந்தும் அவர்களுக்கு நெருக்கடிகளையே கொடுத்து வந்திருக்கின்றோம். ஆயுதமேந்திப் போர்புரிந்த இளைஞர்களை வைத்துக் கொண்டு எம்மினத் தைப் பற்றி பெரிய கற்பனையை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். ஒரு காலத்தில் பல்வேறு இயக்கங்களிலும் இருந்த வறிய கிராமப்புற இளைஞர்களை "எங்கட பொடியள்" எனப் பெருமிதமாக அழைத்து வந்தோம். ஆனால் அவர்களுக்கு என்ன நடந்தது? என்ன நடக்கப்போகிறது? என்று யோசித்தோமா? அவர்களை எமது தற்பெருமைக்கும் பழிவாங்கும் உணர்ச்சிக்கும் பாவித்தபின் தூக்கி வீசி எறிந்திருக்கிறோம். நாம் நன்மைவேண்டுமென பாடு பட வேண்டுமாயின், மற்றவர்களில் மாத்திரம் பிழைபிடித்துக் கொண்டும், நொண்டிச்சாக்குச் சொல்லிக்கொண்டும் இருந்தால் போதாது. இக்கட்டுரைத் தொடருக்கான முக்கியமான நோக்கங்களில் ஒன்று மக்கள் சுயசிந்தனை செய்து, தங்களை ஈடுபட வைப்ப தாகும். இப்படிச் செய்வதன் மூலமே இதே போன்ற நோக்கில் செயற்பட உள்ளவர்களோடு நாமும் இணைந்து செயற்படவிளை கிறோம். இறுதியாக எங்களுக்கு உற்சாகமளித்த, ஆதரவு தந்த பலருக்கும் நன்றி கூறுவதுடன் நாமும் அவர்களை உற்சாகப்படுத்த நம்மாலானவற்றைச் செய்வோம் என உறுதி கூறுகின்றோம்.

60,70களில் பலரது உணரப்படாத நெறிப்படுத் தப்படாத அரசியல் வேலைகள், மனிதாபிமானத் திற்கான குரல், எவ்வாறு இன்று பல ஜனநாயக சக்திகள் உருவாகுவதற்கு வழிவகுத்ததோ, அதேவழியில் எமது இன்றய வேலைகளும் வரலாற்றுக் கட்டத்தில் வைத்துப் பார்க்கப்படும். மக்களிடையே சமூகப்பிரக்ஞையை வளர்ப்பதற்கு எமது செயற்பாடுகள் எவ்வாறு, எவ்வளவு உதவின என்பதை காலம் தான் நிர்ணயிக்க வேண்டும். விடுதலைப்போராட்டத்தில் உயிரிழப்பு தவிர்க்க முடியாதென்பது, கருத்திழந்து, வெறுமனே உயிரிழப்புகள் விடுதலையைத் தந்து விடும் என்ற முட்டாள் தனம் மேலோங்கியிருக்கும் சமயத்தில் எங்களுடைய இந்தப் பங்களிப்பு அவசியமானதென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். எங்கள்



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பங்களிப்புகளினால் மாவீரர் ஆகமுடியாது. ஆனால் அப்பாவிச் சிறுவர்களுக்கு மாவீரர் முலாம் பூசும் வங்குரோத்து அரசியலைத் தடுக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# போராட்டமும் அதன்மூலகாரணமும் திசைதிருப்பமும்.

இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம், இலங்கையரசின் கைகளில் அனுபவித்த வன்முறைகளும், அன்னியப்படுத்துகையும் யாவரும் அறிந்ததே. 1949 இல் தமிழ்த்தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதிலிருந்து தொடங்கி அலைஅலையாக வந்த பல சம்பவங்கள் தமிழ்பேசும் மக்களைத் தம் அடிப்படை உரிமைகளுக்காகப் போராட வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கியது. இவற்றுள் முக்கியமாக 1956இல் அறிமுகப்படுத்தப்பட்ட, தமிழ்மக்களுக் கெதிரான உத்தியோகபூர்வமான பாரபட்சத்திற்கு அரசு அங்கீகாரம் அளித்தமை, வடகிழக்கில் தமிழர் மரபுகளை அழிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள், 1958 இலிருந்து தமிழ்மக்களுக் கெதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளில் அரசின்பங்கு, இலங்கைத்தீவின் கலாச்சார வரலாற்றில் தமிழ்மக்களின் பங்கினை மறுத்தமை, 1972ம் ஆண்டின் அரசியலமைப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அறுபதுகளின் மத்தியில் வாழ்ந்த பல சிந்தனைமிக்க தமிழ் இளைஞர்கள் விடுதலை என்பது, சிங்கள அரசின் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடுவது மாத்திரமல்ல என்பதை உணர்ந்தார்கள். தமிழ் பேசும் மக்கள் தங்களுக்குள்ளேயே மாறுபட்ட வரலாற்று அனுபவங்களையும், சமூகப்பார்வைகளையும் கொண்டிருந்தனர். தெற்கிலும், மலைநாட்டிலும், கிழக்கு மாகாணத்திலும் வாழ்ந்த தமிழ்மக்களிடம், சிங்கள மக்களிடம் இருந்து தங்களைத் தனிமைப் படுத்துவது என்ற கேள்விக்கே இடமிருக்கவில்லை. 1971 இல் கொண்டுவரப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

எண்பதுகளின் பெரும்பகுதிவரை நீடித்திருந்த பல்கலைக்கழகத் தெரிவு தொடர்பான, தமிழ்மக்களுக்கெதிரான பாரபட்சம், கூடுதலாக யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்க மக்களின் கவனத்தை ஈர்ந்தது. ஆனால் வடக்குக்கிழக்கில் விவசாயத் தொழிலில் தங்கியிருந்த பெரும்பான்மைத் தமிழர்களின் முக்கிய பிரச்சினை அவர்களின் அடிப்படைத் தேவைகளைக் கூடத் தீர்க்காததற்கும் மேலாக, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான அரசமுதலீடுகளில் உள்ள பாரபட்சமாகும். கிழக்குமாகாண தமிழ்பேசும் மக்களைப் பொறுத்த வரையில் அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களின் விளைவால் எழும் பிய வன்முறைகளே முக்கியமாகப்பட்டது. மறுபுறமாக மலைநாட்டுத் தமிழர்களை எடுத்துக் கொண்டால் அடிப்படை உரிமைகளின்மையால் பாதிக்கப்பட்டதற்கும் மேலாக, நாளுக்குநாள் சீரழிந்துகொண்டு போகும் அன்றாட வாழ்க்கைத் தரத்தினால் பாதிக்கப்பட்டார்கள். மேலும் சாதிப்பிரச்சினை என்பது இந்திய உபகண்டத் திலேயே ஒரு பொதுவான பிரச்சினையாக இருந்தது. மேலும் குறிப்பாக யாழ்ப்பாண சமுதாயம் படித்தவர்கள், படியாதவர்கள், அரைகுறையாகப் படித்த வர்கள் என்ற அநாவசியமான கேடுவிளைவிக்கும் வகைகளாக மக்களைப் பிரித்துப் பார்த்தது. ஒருவரின் தனிப்பட்ட திறமைகள் எதனையும் கருத்தில் கொள்ளாது, படிப்பில் பின்தங்கினார் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் , சமுதாயத்தில் மாத்திர மல்லாது குடும்பத்திலும் மதிப்பிளந்தனர்.

எனவே விடுதலை என்ற பிரச்சினை இலங்கையில் வசிக்கும் எல்லா மக்களோடும் சம்பந்தப்பட்ட, ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த பலவிடயங்களைக் கொண்ட ஒரு செயலாகப் பலரால் கருதப்பட்டது. இது மட்டுமல்லாது, இதில் பல சர்வதேச பரிமாணங்கள் உள்ளடங்கியிருப்பது நன்கு அறியப்பட்டதாகும். தோட்டத் தொழிலாளர் களின்வாக்குரிமை மறுக்கப்பட்டமைக்கு இறுதி அங்கீகாரம், பிரித் தானியாவில் உள்ள கோமறைக் கழகத்தினால் (Privy Council) வழங்கப்பட்டது. இது பிரித்தா னியாவின் இலங்கையில் உள்ள மூலதனத்திற்கும், இலங்கையின் ஆளும் அதிகாரசக்திகளின் நலன்



படிப்பகம்

www.padippakam.com

களுக்குமிடையேயான தொடர்பையே காட்டுகின்றது. 1977ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையினால் தெற்கில் சிங்களவர் வாழும் பகுதிகளில் இருந்த நிலங்கள் சர்வதேச விவசாய வர்த்தகத்திற்கு அரசினால் வழங்கப்பட்டது. நிலமற்ற சிங்கள மக்கள் தமிழர்களுக்கு எதிராக வெறியூட்டப்பட்டு கிழக்கு மாகாணத்தில் குடியேற்றப்பட்டனர். இதைவிட பெரும்பான்மையான அடிப்படைப் பிரச்சினைகளில், அரச அதிகாரத்தின் தன்மைகளையும் நடைமுறைகளையும், அரசின் செயல் களையும் கேள்விக்குட்படுத்த முடியாதது, சாதாரண சிங்கள, முஸ்லீம், தமிழ் ஆகிய அனைத்து மக்களின் பிரச்சினையாக இருந்தது.

அறுபதுகளில் பல திறமைமிக்க ஆண்களும் பெண்களும் பல்கலைக் கழகப் படிப்பிற்கான வாய்ப்புக்களைக்கூடக் கைவிட்டு அரசியல் வேலைகளுக்காக கிராமங்களுக்குச் சென்றனர். இவர்கள் சாதிப் பிரச்சினை போன்ற அடிப்படை சமுதாயப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக மக்களை அணிதிரட்டினர். எழுபதுகளில் இருந்த முனைப்பான மாணவசக்திகள் கிராமப்புற ஏழை விவசாயிக ளின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதில் விசேட கவனம் செலுத்தியதுடன், தமிழ்த் தோட்டத் தொளிலாளர்களின் பிரச்சினை களுடனும் இணைத்துப் பார்த்தனர்.

இக் கண்ணோட்டத்திற்கெதிராக மேட்டுக்குடியினரைச் சேர்ந்த மறுசாரார், வெறும் தேசிய வாதத்தில் வேரூன்றியும் பழமைவாதத்தில் மூழ்கியும் இருந்த காரணத்தால், மேற்கூறிய முக்கியமான அடிப் படையான சிக்கலான பிரச்சினைகளையெல்லாம் புறக்கணித்து இலகுபடுத் தப்பட்ட தமிழீழம் என்ற ஒற்றைத் தீர்வை முன்மொழியும் நிலைக்கு அவர்களது அரசியல் அவர்களைத்தள்ளியது. இதன்படி இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் வரலாற்று அடிப்படையில் விசேட தேசம் ஒன்றைக் கொண்டிருந்தனர் எனக்கருதப்பட்டது. தமிழர்கள் தற்போது எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை, தமிழ்த் தேசம் தமது இறைமையை இழந்தமையே என இவர்களால்



படிப்பகம்

www.padippakam.com

கூறப்படுகின்றது. இதற்குக் காரணம் ஐரோப்பிய அன்னிய ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசம் சிங்கள இராச்சியங்களுடன் இணைக்கப் பட்டமையே எனவும் கூறப்படுகின்றது. இதன் நிமித்தமாக "தமிழீழம்" சிங்கள அதிகார ஆட்சியிலிருந்து மீட்டெடுக்கப்படுவது தமிழர்களின் தலையாய கடமையாகக் கருதப் படுகின்றது. நாம் இந்தக் கருத்தமைவின் பின்னணியை ஆராயப்போவதில்லை. ஆனால் இதன் விளைவுகளை மட்டுமே குறிப்பிடுவோம். தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தத் தத்துவத்திற்கு தமிழ் மக்களிடம் இருந்து பரந்த ஆதரவைப் பெற்று வாக்குக்களைச் சுவீகரித்துக் கொண்டதே ஒழிய, தமிழ்மக்கள் எதிர் நோக்கும் உண்மையான பிரச்சினைகளை உதாசீனம் செய்தது. கற் பனையான எதிர்பார்ப்புகளை உருவாக்கியது மல்லாது, உண்மையான பிரச்சினைகளை அரசியல் ரீதியில் கையாள மக்களைத் தயார்ப் படுத்தவுமில்லை. குடியேற்றங்கள் பற்றிய தெளிவான விளக்கங் கள், போராட்ட சூழலால் உருவாகும் பிரச்சினைகளைச் சமாளிக்கக் கூடிய அமைப்புகளை உருவாக்கவேண்டியதன் அவசியம், தமிழ் பேசும் மக்களிடையே உள்ள வித்தியாசங்களைச் சுமுகமான முறை யில் தீர்க்கும் அணுகுமுறைகள் என்பவை பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவது பற்றியெல்லாம் எவ்வித கவனமும் செலுத்த வில்லை. எந்தவொரு கடினமான கேள்விக்கும் "ஈழம் வரும்வரை பொறுத்திரு" என்பதே பதிலாக இருந்தது. இவர்களின் கருத்துக்களை விமர்சித்தவர்களையும் கருத்துக்களுக்கு முரணானவர்களையும் துரோகிகளாகக் கூறி புறக் கணிப்பது சாதரணமாக இருந்தது. சிக்கலான நிலைமைகளைப் புறக்கணித்த இவர்களது கருத்துக்கள் உண்மையான பிரச்சினைகளுக்கு எந்தவித தீர்வுகளையும் முன்வைக்கவில்லை. உண்மையில் கொழும்பிலும் ஏனைய இடங்க ளிலும் இருந்த மேல்மட்டங்களில் தமிழீழக் கோரிக்கையென்பது வெறும் பேச்சுவார்த்தை பேரத்திற்கானதென்பதாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இருபது வருடங்களாக தமிழ்மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் இழப்புகளின் பின்பும், பல்லாயிரக்கணக்கான மக்களின் அழிவுகளின் பின்பும் இத்தகைய போலியானதும் கற்பனாவாத



படிப்பகம்

www.padippakam.com

எண்ணப்போக்குகளினதும் தொடர்ச்சியான நிலைமைகளே இன்றும் தமிழ்மக்களின் அரசியலில் அபாயகரமான முறையில் முன்னணி வகிக்கின்றது. இதனால் ஆயிரக்கணக்கான உயிர்கள் இன்னமும் அழிந்து கொண்டி ருக்கின்றன.

அடிப்படைப் பிரச்சினைகளை புறக்கணித்ததன் விளைவாக போராட்டம் இன்னமும் அழிவுப் பாதையிலேயே சென்று கொண்டிருக்கின்றது. இதன்போது சமுதாயம் என்னும் உணர்வு அருகிவர ஆரம்பித்தது. இந்த மண்ணில் எவ்வாறு பலதரப்பட்ட மக்கள் வாழப்போகிறார்கள் என்பதையும், எமது வருங்கால சந்ததியினரின் பல்வேறுபட்ட தேவைகளைத் தீர்க்கும் முகமாக பலமான சமூகஅமைப்பினைக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதையும், அரசதிகார அடக்குமுறைக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதையும் பற்றிய ஆழமான சமுதாய விழிப்புணர்வு ஒரு பொழுதுமே எழவில்லை. பல்வேறு துறைகளில் பட்டதாரிப் படிப்பை மேற்கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்த் தேசம் பற்றிப் பல பேச்சுக்களையும், நாடகங்களையும் மேடையேற்றி விட்டு பட்டம் பெற்றவுடன் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். முதியவர்களில் சிலர், ஆயுதமேந்திப் போர்புரியும் வாலிபர்கள் நாட்டுக்கு விடுதலைவாங்கித்தந்தவுடன் படித்தவர்கள் நாடு திரும்பி நாட்டை முன்னேற்றுவார்கள் எனக் கண்மூடித்தனமானமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள், போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோர் பின்னர் பாதுகாப்புப் படைகளில் சேவைக்கு ஈடுபடுத்தப்படலாம் எனவும் கூறினர். 1977ம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மலைநாட்டு தமிழ்மக்களை வவுனியா எல்லைப் புறத்தில் குடியமர்த்துவது வடபகுதித் தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பாக அமையும் எனவும் பலரால், பொறுப்பீனமாகக் கருதப்பட்டது. ஆயினும் இந்த பாரபட்சமான அசமத்துவ சமுதாய அமைப்பு எவ்வித மாற்றமும் இன்றி இருந்து வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

எழுபதுகளின் பிற்பகுதியிலும், எண்பதுகளின் முற்பகுதியிலும், சில தனிப்பட்டவர்கள் சாதாரண மக்களை ஒன்றுதிரட்டி நெறிப்படுத்துவதில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டனர். பல்கலைக்கழக மாணவர்களும், பாடசாலை மாணவர்களும் பல குறிப்பிடத்தக்க சம்பவங்களில் அநீதிக் கெதிராகக் குரல் கொடுத்திருந்ததையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிப்பதில் முன்னின்று செயலாற்றியதையும் குறிப்பிடலாம். 1983ம் ஆண் டில் தமிழருக் கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டு வந்தது. அரசவன்செயல்களால் ஆயுதம் தூக்க முன்வந்த வாலிபர்களை இந்தியா அரவணைத்து ஊக்குவித்தது. இது போராட்டத்தில், மக்களின் ஜனநாயகப் பங்களிப்பிற்கும், சுயாதீன பங்களிப்பிற்கும் இடமில்லாமல் செய்தது. 1985 ம் ஆண்டின் முற்பகுதியில் புளட் இயக்க உட்கொலைகள் அறியப்பட வந்தமையும், அனுராதபுரப் படுகொலைகளும், எம் இயக்கங்கள் இலங்கை அரச இராணுவத்தைவிட வேறுபாடானதல்ல என்பதை இனம் காட்டியது.

சிங்கள இனத்துவேசம் பல ஆண்டுகளாக இருந்த பொழுதிலும், அனுராதபுரப் படுகொலைகள் நடக்கும் வரையில் எல்லாப் போராட்ட இயக்கங்களும், தமது போராட்டமானது சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்றே பறைசாற்றின என்பது இங்கே குறிக்கப்பட வேண்டியதாகும். ஆகக் குறைந்தது இரண்டு பிரதான போராட்ட இயக்கங்கள், தமது இயக்கத்துள்ளே சீரழிவுகளை எதிர்நோக்கிய போதும், இலங்கை அரசபடைகள் பெருமளவில் தமிழ்மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்த போதும், தாம் ஜனநாயக சோசலிச நாட்டிற்காகப் போராடுவதான கோட்பாட்டை தொடர்ந்து வெளிப்படுத்தின. இவர்கள் சிங்களப் பொதுமக்களைக் கொல்லுதலை தவிர்த்துக் கொண்டனர். இவ்வாறான எழுபதுகளில் நிகழ்ந்த விவாதங்களின் ஆரோக்கியமான அம்சங்களை மேற்கூறிய படுகொலைகள் தவிடுபொடியாக்கின.

பல்வேறு இயக்கங்களின் அடாடவடித் தனங்களுடன் இணைந்து



படிப்பகம்

www.padippakam.com

1985ம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற புளட் இயக்கப் படுகொலைகளும் (தீப்பொறியினால் வெளியிடப்பட்டது.) 1986ம் ஆண்டின் நடுப்பகுதியில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ரெலோ இயக்க உறுப்பினர்களைக் கொன்று எரித்த சம்பவங்களும் விடுதலைப் போராட்டத்தின் உள ஒருங்கமைப்பையும் தார்மீக பலத்தையும் இறுதியில் சின்னாபின்னப் படுத்தியது. இந்திய மண்ணில் நடைபெற்ற ரெலோ இயக்க உட்கொலைகள் எல்லோருக்கும் தெரிந்ததே. அத்துடன் புலிகளும் இதனை புரிந்திருந் திருந்தனர். இந் நிகழ்ச்சிகள் போராட்ட இயக்கங்களின் சார்பான இந்தியத் தொடர்பின் தன்மையை அப்பட்டமாக்குவதுடன், "தமிழ்நாட்டில் துவக்கு முனை வாழ்க்கையா?" என்னும் காலம் தாழ்ந்த இன்றைய இந்தியசோகப் புலம்பலை அர்த்தமற்றதாக்குகிறது.

ஏனைய இயக்கங்களை அழித்தொழித்த போது அதனுடன் இணைந்து வளர்ந்த உள்ளார்ந்த பயங்கரவாதமே இன்று புலிகளுக்கு பொது மக்களைக் கையாள ஏதுவாக அமைந்தது. இலங்கை அரசபடைகளுக் கெதிரான பயமும், தமிழரின் குறுகிய தேசியவாதமுமே புலிகளின் இருப்பிற்கான அடித்தளம். இவ்வடிப்படையான குணாம்சத்தை, 1983ம் ஆண்டு அரசாங்கத்தினால் சந்தேகத்தின் பேரில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர் படுகொலை செய்யப்பட்டதைப்போல, புலிகளின் பிறவுண்வீதி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் கொல்லப் பட்டதைத் தெளிவுபடுத்துகின்றது.

தமிழ்மக்களின் விடுதலைக்காக, உயிரை துச்சமாக மதித்து தமது வீட்டையும் துறந்து வந்த நூற்றுக் கணக்கான வாலிபர்கள், தமது சொந்த இன இளைஞர்களின் கைகளால் ஏன், சில சமயம் தமது சொந்தச் சகோதரர்களின் (உடன் பிறப்புகளின்) கைகளில் துர்ப் பாக்கியமாக இறந்தனர். ஒரே குடும்பச் சகோதரர்கள் வேறுவேறு இயக்கங்களில் சந்தர்ப்பவசமாகச் சேர்ந்தமையால் பிரிக்கப்பட்டனர். இப்பயங்கரமான சூழல் நிலவிவரும் காலகட்டத்தில், வடக்குக்



படிப்பகம்

www.padippakam.com

கிழக்கில் வாழ்ந்து போராட்டத்தில் பங்குபற்ற விரும்பிய மக்கள் நம்பிக்கையிழந்து வெளிநாட்டுக்கு குடிபெயரத் தொடங்கினர். சாதாரண போர்க்கால சூழல் காரணமாக நடைபெற்ற இளம் சந்ததியினரின் குடிபெயர்வுடன் போராட்டத்திலிருந்து அன்னியப்படுத்தப்பட்ட இளைஞர்களும் இணையத்தொடங்கினர். எச்சமுதாயத்திற்காக விடுதலைப் போராட்டம் எழுந்ததோ அச்சமுதாயம் நிலைகுலைய ஆரம்பித்தது.

ஆரோக்கியமான சமுதாயத்தை எமது மண்ணில் கட்டியெழுப்புவதையே மேன்மையான நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டிய போராட்டம், பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்னெடுத்துச் செல்லாமல், சாதாரண மக்களைக் குறைகூறுமளவுக்குச் சென்றது. குறிப்பாகப் புலிகள், போராட்டத்தில் மக்களின் பயன்பாட்டை மூன்று பிரிவுகளில் கருதினார்கள். - போராட்டத்தில் ஆயுதமேந்துபவர்கள், பிரச்சாரத்துக்காக இராணுவ மோதலில் கிடைத்த பிணங்கள், மேலைநாடுகளுக்கு குடிபெயர்ந்து பணவுதவி செய்பவர்கள். இக் கருத்து இவர்களது இராணுவ தந்திரோபாயத் திட்டமிடலைப் பெருமளவு ஆட்சிசெய்தது. அண்மைக்கால சம்பவங்களாகிய, 1989ம் ஆண்டு ஆவணி 2ம் திகதி வல்வெட்டித் துறையில் பரஸ்பர உடன்பாட்டை மீறி, ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு பின்வாங்கியமையின் விளைவால் மக்கள் இராணுவத்தாக்குதலுக்கு உட்பட்டமையையும், மன்னார் வைத்தியசாலைக்குள்ளிருந்து இந்திய இராணுவம் மீது தாக்குதல் செய்தமையையும், 1990ம் ஆண்டு ஆனிமாதத்தில் கிழக்கில் சரணடைந்த பல நூற்றுக்கணக்கான சிங்கள, முஸ்லீம் நகர்க்காவலர்களைக் கொன்றுவிட்டு, மக்களைப் பாதுகாக்க எந்தவித ஏற்பாடும் செய்யாமல் காட்டுக்குள் பின்வாங்கியமையையும், அதன்பின் சிறிதுகாலத்தில் புலிகளின் நோயாளரை அண்மையில் இருந்த வைத்தியசாலைக்கு அப்புறப்படுத்திவிட்டு, ஏனைய யாழ்வைத்திய சாலை நோயாளருக்கு அறிவிக்காமல் யாழ்ப்பாணக் கோட்டையை "செல்" (Shell) தாக்குதலுக்கு உள்ளாக்கிய



படிப்பகம்

www.padippakam.com

மையையும் உதாரணங் களாகக் குறிப்பிடலாம். இப்பட்டியலில் இன்னும் எண்ணற்ற சம்பவங்களைக் சேர்த்துக் கொள்ளலாம். **மக்களின் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டிருக்க வேண்டிய விடுதலைஇயக்கம், பிரச்சாரத்திற்காக மக்களின் அழிவுகளை அதிகரித்துவிடும் சதிப்பாணி வேலைமுறையில் ஈடுபட்டது.**

போராட்டத்திற்கு அத்தியாவசியமான பொருளாதார, சமூக நிலைப்பாட்டின் வீழ்ச்சியும், சமுதாயத்துக்குள் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளும் கொலைகளுமாகிய நிகழ்வுகள் ஒன்றுடனொன்று கைகோர்த்து முன்னேறிச் சென்றன. போராட்டத்தின் வரலாறோ போராட்டம் பற்றிய அறிவோ இல்லாத அப்பாவிச் சிறுவர்களின் குழந்தைத் தனத்தை (விளையாட்டுத் தனத்தை) பயன்படுத்தி ஆசைகாட்டி இராணுவப் போராட்டத்தில் ஈடுபடுத்தினர். பின் இச் சிறுவர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டு தம் சொந்தமக்களையே கொல்வதற்கும் சித்திரவதை செய்வதற்கும் பயிற்றப்பட்டனர். உண்மை யான ஆதாரமற்ற இப் போராட்டமானது, மக்களின் உணர்ச்சிகளைக் கேவலமான, அழிவுதரக்கூடிய வழிகளில் தூண்டியே தொடர்ந்து செல்ல வேண்டியிருக்கின்றது. தமிழ்மக்களின் பாதுகாப் பின்மையை வழங்குவதிலேயே அவர்களின் பலம் தங்கியிருந்தது. மேற்கூறப்பட்ட இராணுவ தந்திரோபாயம், முஸ்லீம், சிங்கள பொது மக்களுக் கெதிரான தாக்குதல்கள் யாவும் தமிழ் மக்களை ஒரு பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளும் நோக்கமுடையன. புலிகளின் பேச்சாளர் யோகியின் 1987ம் ஆண்டு மேதினப்பேச்சு உட்பட, புலிகளின் போராட்டம் சர்வதேசரீதியில் அங்கீகாரம் பெறுவதற்கு பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் இறங்கவேண்டுமென, புலிகளால் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்தது.

இப்படியானதொரு அடிப்படையில் பலவீன மான போராட்டம் எவ்விதமான நிரந்தர் இலட்சியங்களையோ, குறிக்கோள்களையோ கொண்டிருக்க முடியாது. அதனால் பிரதான இயக்கம், தனது தலைமைத்துவத்தினதும், வெளிநாடுகளில் உள்ள தமக்கு வால்



படிப்பகம்

www.padippakam.com

பிடிப்பவர்களினதும் அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் திரும்பத் திரும்ப வெட்கக் கேடான பல குத்துக்கரணங்களை அடிக்க வேண்டிய கட்டாயத்துக் குள்ளானார்கள். போராட்டமானது, இலங்கைத் தீவின் சகல ஜனநாயக சக்திகளையும் உள்ளடக்கியதாகவும் தீவில் உள்ள மற்ற இனங்களினதும் நலன்களிற்குப் பொறுப்பான தாகவும், சந்தேகத்துக் குரிய வெளிநாட்டுச் சக்திகளுடன் இணையா மலும் அமையவேண்டுமென, சிந்தனை மிக்க தமிழர்களால் எழுபது களில் கூறப்பட்டது. மேலும், குறிப்பிட்ட வெளிநாட்டுத் தொடர்புகள், மக்களைப் பலப்படுத்துவதை விட, அவர்களை வேறு தீமையான வழிகளில் கையாண்டு பலவீனப்படுத்தும் எனவும் கூறப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே மக்களின் ஆற்றல்களைப் புறக்கணித்து அதிகார வெறி கொண்ட போராட்டம், வஞ்சக எண்ணம் கொண்ட வெளிநாட்டுச் சக்திகளின் ஆதரவைப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இப்படியான இழிவான செயல்களுக்குச் சில வேளைகளில் சிறீ லங்காஅரசும், புலிகளும், மற்ற இயக்கங்களும் போட்டியிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. மக்களின் பாதுகாப்பும், கௌரவமும் வல்லரசுகளின் அதிகார ஆயுதச் சந்தை, உளவு ஸ்தாபனங்கள் கொண்ட மறைமுகமான உலகில், ஏலத்தில் வாங்கப்படவேண்டிய விடயம் போல் தோன்றியது. 1984 இல் முக்கியமான தமிழ் அரசியல்வாதி ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி றீகனுக்கு வெளிப்படையான கடிதம் ஒன்றை எழுதினார். அதில் அவர், அமெரிக்க நலன்களை இலங்கையில் காணவேண்டுமாயின், இலங்கை அரசுடன் கூட்டுச்சேருவதை விட தமிழர்களுடன் சேருவதே அமெரிக்க நலன்களைப் பிரதிபலிக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார். இந்திய உளவுப்படை "றோ" (RAW) வுடன் புலிகளுக்கு இருந்த உறவுகள் யாவரும் அறிந்ததே. இந்த இயக்கத்திற்கு போதைவஸ்துக் கடத்தலில் இருந்த தொடர்புகள் பற்றி ஐரோப்பாவின் பிரபல பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருந்தன. (உதாரணமாக 1988 தை மாத லண்டன் சண்டே ரைம்ஸ்). இஸ்ரேல் உளவுப்படையான மொசாட் டில் முன்னாளில் சேவையாற்றிய விக்டர் ஒஸ்ரவஸ்கி என்பவர் தாம் இலங்கை இராணுவப் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

ஒரேசமயத்தில் ஒரே முகாமில் ஒருவருக் கொருவர் தெரியாத வகை யில் பயிற்சியளித்ததாக எழுதியிருந்தார். இவ் விடயம் எழுதப்பட்ட (BY WAY OF DECEPITION) என்னும் நூல் இவரது மொசாட் அனுபவங்கள் பற்றியதாகும். புலிகள் றோவின் தூண்டுதலின் பேரி லேயே அநுராதபுரப் படுகொலைகளைச் செய்தது என தீவிரவாதக் குழுக்களை மேற்கோள் காட்டி, அமெரிக்க சர்வதேச வார இதழான ரைம் இல் 1989ம் ஆண்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. "றோ" இதை இலங்கை அரசிற்கு பேச்சுவார்த்தைக்கான நெருக்கடியைக் கொடுக்க ஒரு வழியாகப் பயன்படுத்தியது எனவும் குறிப்பிட்டிருந்தார்கள். புலிகள் இதனை ஏனைய இயக்கங்களை விட "றோ" விடம் இருந்து கூடிய சலுகைகளைப்பெற ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தியது எனவும் கூறினர். இது உண்மையாக இருந்தாலும் ஆச்சரியப்படுவ தற்கில்லை. ஏனெனில் புலிகள், சகோதர இயக்கங்களைச் சின்னா பின்னமாக்கியதூடாக தமிழர் போராட்டத்தின் இராணுவ பலத்தைச் பலவீனப்படுத்தி சிறீலங்கா இராணு வத்தை முன்னேற வைத்தது. இதனால் இந்தியா மீண்டும் மீண்டும் இலங்கையின் இறைமையையும், ஐக்கியத்தையும் பாதுகாப்பதாக கூறிக்கொண்டிருந்த போதும், இந்திய அங்கீகாரமே புலிகளுக்கு ஒரே வழியாகத் தோன்றியது. இந்தியா இலங்கையில் காலடி எடுத்து வைப்பதற்கு தாமே உதவியதாக புலிஇயக்க முக்கிய பேச்சாளர்கள் பெருமிதமாகக் கூறினார்கள்.

1887இல் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபின், தாம் ஒப் பந்தத்தின்படி ஒரு ஜனநாயகப் போக்கைகடைப் பிடிப்பதாகக் கூறிய புலிகள் தந்திரமான இரட்டைப்போக்கையே கடைப்பிடித்தனர். ஒரு புறம் பேச்சுவார்த்தை யையும் மறுபுறம் அச்சுறுத்தலுமாகவுமே இருந்தது. கிழக்குமாகாணத்தில் நீண்டகாலமாகக் குடியிருந்த 200 சிங்களமக்கள் கொல்லப்பட்ட மையை இந்தியாவை நெருக்கடிக்குட் படுத்தியதாகக் கூறலாம். இச்சம்பவங்கள் நடந்த ஒருமாதத்திற்குள் புலிகளின் பிரமுகர் மாத்தையா, தமிழ்மக்கள் அனுபவிக்கும் துன் பங்களைக் காரணமாகக் கூறி இந்தியாவைப் பேச்சு வார்த்தைக்கு



படிப்பகம்

www.padippakam.com

அழைத்தார். இதன் பின் அரசாங்கத்துடனும், அரசபடைகளுடனும் புலிகளுக்கு நெருங்கிய உறவு ஏற்பட்டது. இலங்கை அரசைப் பொறுத்தவரை, ஒரு தமிழர் போராட்ட இயக்கமான புலிகளைப் பாவித்து, தான் எதிரிகளாக நோக்கும் தமிழர்களைச் சிறைப் பிடித்து துன்புறுத்திக் கொல்வது மகிழ்ச்சிகர மானதாக இருந்தது. இதன் பொழுது பல போராளிகளும், சாதாரண மக்களும், இந்திய இராணுவத்தின் பலவந்தத்தால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார்கள். இந்த ஆச்சரியமான உறவு ஒருபுறமிருக்க, புலிகள் முன்பு இந்தியாவுடன் போர்புரியக் காரணம், இந்தியா, தமிழரை நசுக்கி சிறீலங்கா அரசின் நலன்களைப் பேணியது என்று கூறியமையையும் குறிப்பிடலாம். புலிகள் 1987 இல் கர்ச்சித்த அதனது கோஷங்களுக்கு முரணாக, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்தபின் தாமும் பிரேமதாசாவும் இலங்கையின் தேசபக்தர்கள் என்ற முறையில் இந்தியாவை வெளியேற்ற ஒன்றாக உழைக்கவேண்டும் எனப்பேட்டிகளில் கூறினர். 1990ம் ஆண்டு ஆனி மாதத்தில் தொடங்கிய இலங்கை இராணுவத்துடனான தற்போதைய யுத்தத்திற்கான விளக்கம் கொடுத்த புலிகளின் பேச்சாளர் அன்டன் பாலசிங்கம், அவர்களின் பாணியில் ஒரு புதுக் கதை கூறினார். அவர், இலங்கை அரசின் உண்மையற்ற, நம்ப முடியாத, நிலைப்பாட்டால் எந்தவித சமா தான ஒப்பந்தத்திற்கும் இந்தியாவும் பங்களிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். மக்களைப் புறக்கணிப்பதும், வெளிநாட்டு சக்திகளுடன் தொடர்பு வைப்பதும் எப்பொழுதும் ஆபத்தானது என்பது பற்றி முன்பு குறிப்பிட்ட இளைஞர்கள் இன்று தேசத்துரோகிகள் எனக்குற்றம் சாட்டப் பட்டு கைதாகி சித்திரவதை செய்யப்படுவது வேதனைக்குரியதாகும். மக்களை ஆதாரமற்ற, வலுவிழந்த, அதிகாரமற்றவர்களாக்கி தாம் தப்பிப் பிழைப்பதற்கு வெளிநாட்டுச் சக்திகளுடன் சந்தர்ப்பவசமான தொடர்புகளை வைத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்கு புலிகள் உள்ளானார்கள். இத்தகைய பாரதூரமான தொடர்புகளின் பின் விளைவுகளை எதிர் நோக்கும் பொழுது பொதுமக்களின் உயிர்களை



படிப்பகம்

www.padippakam.com

வெகு சுலபமாகப் பலிகொடுத்தனர். இத்தகைய திடீர் வன்முறைகளால் வரும் உயிர்ப்பறிப்புகளுக்கு எவரிடமும் விளக்கம் இருக்க வில்லை.

மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என உண்மையிலேயே ஒரு விடுதலைஇயக்கம் நம்பியிருந்தால் மக்களை, பிரச்சினைகளை அரசியல்ரீதியில் கையாளும்படி நெறிப்படுத்தி இருக்க வேண்டும். அத்துடன் தமது நியாயங்களைத் தெளிவாக்கி, போரை தமது இறுதி ஆயுதமாகக் கருதி இருக்க வேண்டும். ஆனால் எதுவித வாதப்பிரதி வாதங்களோ, உறுதியான காரணங்களோ இன்றி பிரகடனப் படுத்தப்படாத போர் சடுதியில் வெடித்தது. புரட்டாதி மாதம் 1987ம் ஆண்டில், நீண்டகாலமாக தமிழர்களுடன் சமாதானமாக வாழ்ந்த 200 சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டமை, போருக்கு ஒரு ஆரம்பமாக அமைந்தது. இதே போல் 1990ம் ஆண்டு ஆனிமாதத்தில் சரணடைந்த நூற்றுக்கணக்கான முஸ்லீம், சிங்கள ஆயுதப் படையினர் கொல்லப்பட்டமை போருக்கு ஒரு ஆரம்பமாக அமைந்தது. இதில் அனேக ஆயுதப்படையினர் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்ற உறுதிப்பாட்டிற்குப் பின்பே ஆயுதங்களைக் கையழித்தமை குறிப்பிடத்தக்கது. இதன்பின் கிழக்கு மாகாண மக்களை, கொடுமை செய்வதில் பெயர்போன அரசபடைகளின் கருணையில் விட்டுவிட்டு, தமக்கே உரித்தான பாணியில் பின்வாங்கினார்கள்.

பல நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லீம்களைப் படுகொலைசெய்து தமிழ், முஸ்லீம் ஆதாரங்களை தகர்க்கும் வகையில் செயற்பட்டனர். இதனால் மக்களின் பாதுகாப்பு மேலும் கேள்விக்குறியானது.

துரிதகதியில் ஏற்பட்டு வந்த சீரழிவுகள் இயக்கங்களின் உள்ளே வளர்ந்து வந்த அதிருப்தியாளர்களைக் கையாழுவதில் வெளிக் கொண்டுவரப்பட்டது. 1985ம் ஆண்டு புளட் இயக்கத்திலிருந்து தீப்பொறி குழு வெளியேறிய போது இந்நிலையை தெளிவாகியது. புளட், ரெலோ, எல்.ரீ.ரீ.ஈ ஆகிய இயக்கங்கள் இந்திய மண்ணில் இருந்தபோது, பிரச்சினை தருபவர்கள் எனக் கருதப்பட்டவர்களை,



படிப்பகம்

www.padippakam.com

இந்திய அதிகாரிகளின் பாராமுக அனுசரணையுடன் கொன்று குவித்தது நாடறிந்த விடயமாகும். புலி இயக்கத்தினால், மற்ற இயக்கங்கள் அழித்தொழிக்கப்பட்ட போது, அவ்வியக்கத்திலிருந்த பெருந்தொகையானோர் வெளிநாடு சென்றனர். வெளிநாடு செல்ல வகையற்றவர்கள், உடல், உள ரீதியில் கையாலாகாதவர்களாக்கப்பட்டு, இந்தியப்படையினராலும், பின்னர் இலங்கைப் படையினராலும் கைப்பொம்மைகளாகப் பயன்படுத்தப்பட்டனர். இவர்களில் சிலர் பயமுறுத்தி சித்திரவதை செய்தல், கொலைபுரிதல் போன்ற குற்றச் செயல்களுக்குப் பெயர்போனவர்கள். புலி இயக்கத்தினுள்ளேயே, தமது ஆத்மாவை இழந்து திக்கப்பிரமை பிடித்த பலர் இருந்தனர். வாழ்விலே வெறுப்புடனிருந்த அவர்கள் கொல்லப்பட்டபோது இயக்கத்தினால் வீரபுருஷர்களாகவும், மாவீரர்களாகவும் கொண்டாடப் பட்டனர். இவ்வாறான நம்பமுடியாத உண்மைகளை, நெருங்கிய உறவினர்களும், ஒரு சில நண்பர்களும் அறிந்து கொண்டும் கையாலாகாத் தனத்தில் மௌனத்தில் இருக்கின்றனர். இந் நிலையில் மந்திர உச்சாடனம் செய்து, சொன்னதை சொன்னபடி செய்யக் கூடியதும், இலகுவில் கிடைக்கக்கூடியதும், மேலும், நம்பிக்கைக் குரியவர்களுமான சிறார்களைப் படையில் சேர்த்துக் கொள்வது மிகவும் சாதகமாக அமைந்தது. 1991ம் ஆண்டு ஆடி மாதம் ஆனை யிறவில் இராணுவப்போரில் படுதோல்வி அடைந்த பிறகு, காயப்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்கள் (13 –19 வயதுடையோர்) யாழ்வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டனர். இந் நேரத்தில், காயப்பட்ட சிறுவர்களுக்கு வழமையான நடை முறைக்கு மாறாக இரத்ததானம் செய்வதில், வயதில் 20 பதுக்கு மேலான இளைஞர்கள் போட்டிபோட்டு முன்னின்றதை, புலிகளின் பேச்சாளர் யோகி வெறுப்புடன் வெளிப் படுத்தினார். தமது வகை, தெளிவற்ற மயக்கநிலையிலிருக்கும் அரசியலொன்று ஏற்படுத்தக்கூடிய பேரிழப்பொன்றினை நேரடியாக இது காட்டிநின்றது என்பதை அவர் புரியமறுத்தது ஒரு விந்தைதான்! 1987ம் ஆண்டின் கடைக்கூற்றில், இந்திய அமைதிகாக்கும்படையின் அதிமேல் தலைமையின் கீழ், கேவலமான பல வேலைகளைச் செய்வதற்கு இடம் கொடுத்ததன் காரணமாக மற்ற இயக்கங்கள்



படிப்பகம்

www.padippakam.com

தம்மை மேலும் சீரழித்துக் கொண்டனர். தமது நன்மதிப்பை ஒரு காலகட்டத்தில் ஜனநாயக பாரம்பரியத்தை ஓரளவுக்குத்தானும் கடைப்பிடித்ததால் மதிப்பைப் பெற்றுக்கொண்ட E.P.R.L.F , பின்னர் வெறும் கொலைஞர்களாகத் தம்மைக் தாழ்த்திக் கொண்டனர். இந்திய அமைதிகாக்கும் படையின் பிடியில், இவ்வியக்கங்கள் இருந்த போழுது, இறுதியில் புஸ்வாணமாகிப்போன தமிழ் தேசிய இராணுவத்திற்காக வீதியில் நின்ற சிறார்களைப் பிடித்து பல வந்தமாகப் படையில் சேர்த்த பொழுது, அவர்கள் மக்களின் அங்கீகாரத்து க்கான எல்லா அடிப்படைகளையும் இழந்து போயினர். இறுதி ஆராய்வில் ஏனைய இயக்கங்களின் செயற்பாடுகள், விடுதலைக்கு எவ்வித பங்களிப்பை அளிப்பதிலும் பார்க்க புலிகளின் அரசியல், அங்கீகாரம் பெறவே உதவின.

மக்கள் அனுபவித்த துன்பம் எல்லையற்ற வண்ணம் அதிகரித்த போதும், தமிழ் சமுதா யத்தில் ஆதிக்கம் மிகுந்த அரசியல் எதுவித மாற்றமும் அடையாமல் அப்படியேதான் இருக் கின்றது. எழுபதுகளின் அரசியல் கோஷம், இன்னும் பலமாக ஒலிக்கிறது. - தமிழ் பிரதேசங்களில் உணர்ச்சிமிக்க இனவாதமும், தமக்கு எதிரானோரை துரோகிகளாகக் கூறிக் கொள்வதிலும், மறுபுறமாக வேறு இடங்களுக்கு தம்மை விட்டுக்கொடுத்து இரகசிய ஒப்பந்தங்களை செய்யும் நிலையிலும் வெளிப்படுகின்றது. புலிகள், ஏனைய இயக்கங்களைத் தாக்கி அழித்தபோது, தாம் மற்றவர்கள் போல் தனிநாட்டுக் கொள்கையில் இருந்து விலகமாட்டோம் எனக் கூறியே தமது அட்டூழியங்களை நியாயப்படுத்தினர். இதே வேளை, இப்பொழுதும் மூன்றாம் நபர்கள்மூலம் இரகசியமாக தாம் சமஷ்டி ஆட்சி முறைக்கு பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக செய்திகள் அனுப்பி வருகின்றது. இந்நிலைமைகளை ஆழமாக நோக்கும் பொழுது, தமிழ் துரோகிகள் எனப் புலிகளால் குற்றம் சாட்டப்பட்டு, இரு முக்கியஸ்தர்களை புலிகளின் ஆதிக்க வெறிக்குப் பலிகொடுத்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் அரசியலுக்கும், புலிகளின் அரசியலுக்கும் அவ்வளவு வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

எதுவித தார்மீகத் தடுப்புக்களுமின்றி, யதார்த்தத்தைப் புறக்கணித்து, எல்லாவற்றுக்கும் மேலாக மக்களை மறந்த அரசிய லொன்றை, வெளிநாட்டுச் சக்திகளுக்கு விற்பதன்மூலம் தனது பலத்தை நிலை நாட்ட முயலும் அரசியல், கட்டாயம் இழிவுபடுத்தப்படுவதுடன், வலு விளந்து போகும் என்பதனையும் புலிகள் இப்போது உணரத் தொடங்கியுள்ளனரா என்பது கேள்விக்குரிது.

முன்பிருந்த தேசியவாத அரசியலுக்கும், புலிகளின் அரசியலுக்கும் இயல்பில் வித்தியாசம் காணப்படாவிடிலும் தரத்தில் வித்தியாசம் இருந்தது. கூட்டணியைப்பொறுத்த வரையில் தமிழ்ச் சமுதாயத்தின் மேல்மட்டத்திலிருந்தவர்களை தம் கைக்குள் வைத்துக்கொண்டு சமாளிக்க முடிந்தது. காலத்துக்குக் காலம் கோஷங்களை எழுப்பி பாராளுமன்ற அரசியலைக் கையாழுவதில் பிரச்சினை இருக்கவில்லை. புலிகளைப் பொறுத்தவரையில் அவர்களின் செய்கைகள் பாரதூரமான வையாக இருந்தமையால் அவற்றைச் சமாளிப்பது கடினமாக இருந்தது. ஏனெனில் அவர்கள் குறிப்பிடக் கூடியளவு தொகையான தமிழரை துரோகிகள் எனக்கூறிக் கொன்றும், சிறைப்பிடித்து சித்திரவதை செய்ததும், சிறுபிள்ளைகளை தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடுத்தியும் மக்களுக்கு அதிக துன்பங்களைக் கொடுத்தார்கள். மேலும் முஸ்லீம் மக்களை கொடூரமான வகையில் அந்நியப்படுத்தினர். எனவே இவர்கள் வடகிழக்கில் தனி அதிகாரம் செலுத்தும் கோரிக்கை, சிங்கள இனவாதிகள் முழு இலங்கைக்கும் அதிகாரம் செலுத்தும்கோரிக்கை போன்றதென்றால் மிகையாகாது. போரா ட்டத்தின்வரலாற்றை நுட்பமாக ஆராய்ந்தால், புலிகளின் தடுமாற்றமும், இரட்டைப் போக்கும் நிறைந்த வரலாற்றின் இறுதியில் எத்தகைய தீர்வை அடைந்தாலும் அது கேள்விக்குரியதாகவே இருக்கும். அஃது,இதே தீர்வைப்பெற இவ்வளவு உயிரழிவுகளும், பொருளிழப் புகளும் இல்லாமலே இதை அடைந்திருக்கலாமா? என்ற சந்தேகமே ஏற்படும்.

இவ்வாறாகப் புலிகளின் அரசியலினால், ஓரளவுக்குத்தானும்



படிப்பகம்

www.padippakam.com

ஜனநாயக ஆட்சியை அதாவது, மக்கள் தாம் நினைத்தவற்றைப் பேசவோ, சிந்தித்து கேள்விஎழுப்பவோ கூடிய நிலையை உருவாக்கவே முடியாது. எனவே ஒடுக்குகின்ற தனது அடக்குமுறைக் கருவியை அது விட்டால் மக்கள் முன் தான் நிர்வாணமாக நிற்பதாகவே அது கருதும். தானாகவே ஆயுத கலாச்சாரத்தினுள் சிக்குண்டுள்ளது. 1990ம் ஆண்டின் ஆரம்பத்தில் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பால சிங்கம் பத்திரிகை களுக்குப் பேட்டி அளிக்கும்போது (ஆங்கிலத்தில்) கடைசி இந்தியப்படைகள் நம் மண்ணைவிட்டு வெளியேறியதும் ஆயுதத்தைக் கைவிடுவோம் எனக்கூறினார். மக்கள் அமைதி வந்தது என எண்ணி இருந்த இதேவேளை புலிகள் வன்முறைக் கோஷங் களினால் சிறுவர்களை உணர்ச்சியூட்டி அவர்களை ஆயுதபாணியாக் குவதில் ஈடுபட்டனர். அக்கட்டத்தில் பாடசாலை மாணவர்களால் எழுப்பப்பட்ட மனச்சங்கடமான கேள்வி களை சமாளிக்க முடியாமல் புலிப்பிரச்சாரகர்கள் திண்டாடினார்கள். இவை ஒருபுறம் இருக்க, இதே காலப்பகுதியில், கொழும்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை களில் ஈடுபட்டிருந்தனர். இதுவொரு முக்கியமானதும் வெளியில் சொல்ல முடியாதளவுமான ஒன்றுக் காகவே நடைபெற்றதாகவே கருதலாம். அதாவது வடக்குக் கிழக்கில் தாம் நினைத்தபடி சட்ட மெதற்கும் கட்டுப்படாமல் முழு ஆயுதக் கட்டுப்பாடும் வைத்து, நினைத்தபடி மக்களைச் சிறைப்படுத்தி, சித்திரவதைசெய்து கொல்ல எல்லாம் வல்ல அதிகாரத்தை வேண்டி வற்புறுத்தியதாகவே இருந் தது. **இது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை என்ற அம்சத்திற்கு ஒரு புதுஅர்த்தத்தைக் கொடுத்தது**. இந்திய அமைதிகாக்கும் படை வெளியேறி மக்கள் சமாதான காலம் என நினைத்துக் கொண்டிருந்த காலத்தில் புலிகளின் சிறைக் கைதிகள் ஏறக்குறைய 2000 ஆக இருந்தது. புலிகளைப் பொறுத்தவரையில் அவர்களின் பாதையில், அவர்களுக்கு வேறுவிதமாக செயற்பட வழியிருக்கவில்லை. இந் நிலையில் அவர்களால் தெளிவானதும், நியாயமானதுமான கோரிக்கைகளை வெளிப்படையாக மக்கள் முன்வைத்து பேச்சு வார்த்தைகளைத் தொடரமுடியாமல் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

எவருமே புரிந்துகொள்ளாத வகையில் 1990ம் ஆண்டு ஆனிமாத யுத்தம் வந்தது. இந்த யுத்தத்தில் ஏதாவது விதத்தில் நீதி நியாயம் இருக்கிறதா என்பதும், தமிழ்மக்களின் நிலைபற்றி சிந்திக்கப்பட்டதா என்பதும் மக்களிடையே ஐயத்துக்கிற்கிடமானதாக அமைந்தது. இத்தகைய ஐயப்பாடு இருக்காவிடில், விடுதலைப்போரின் ஆரம்பத்தில் இருந்தது போல், மக்கள் மத்தியில் இதற்கும் இயல்பான, பரந்த ஆதரவு இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மாறாக, மக்கள் மத்தியில், புலிகளின் இம் முடிவுபற்றி, அவர்களை மறைமுகமாக குறை கூறும் நிலையே இருந்தது. நிராயுதபாணிகளான, நூற்றுக் கணக்கான சிங்கள, முஸ்லீம் நகர்காவலர்களைக் கொன்றதுடன் போராட்டம் மிகவும் இழி நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நிலையில் புலிகளின் அரசியல் தலைவரான மாத்தையா, "ஈழமண்ணில் உள்ள எல்லா மக்களும் அவர்களது உடமைகளும் விடுதலைப் போராட்டத்திற்குச் சொந்தமானவை" எனப் பிரகடனம் செய்தார். காலப்போக்கில் பல இன்னல்களுக்கு உள்ளாகி,பயப்பட்ட வறுமை நிலையடைந்த மக்கள், தம்மீது விதிக்கப்பட்ட இத்தகைய சூழ்நிலையின் பேரில் வேதனையடைந்தார்கள். மக்களைப்பலப்படுத்தி மக்களின் ஆதரவில் நடக்கவேண்டிய விடுதலைப் போராட்டத்திற்கு இது ஒரு திகைப்பான திருப்புமுனையாகவும் அமைந்தது. ஆனால் இக்கோரிக்கை வெளிநாடுகளில் உள்ள புலிகளின் ஆதரவாளர்களின் வங்கி இருப்புகளின் மேல் விதிக்கப்படவில்லை. சிறீலங்கா ஆயுதப்படையினர் வெறித்தனமாக ஆயிரக்கணக்கான மக்களைப் படுகொலைசெய்து இலட்சக்கணக்கான மக்களை அகதிகளாக்கிய பின்பே தமிழருக்கு சிறிதளவு சர்வதேச அனுபவம் கிடைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் போராட்டத்தில் விடுதலையும், மனித உரிமைகளும்:

மனித உரிமைகளின் சட்ட அம்சமாக அமைந்த 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் சர்வதேசப் பிரகடனம் உலகின் சகல மக்களின் வரலாற்று அனுபவத்தின் சாரமாகக் கருதப்படலாம். இப் பிரகடனத்திற்கு சிறிது காலத்திற்கு முன்பதாக சர்வதேச சமூகம் இரு உலகப் போர்களையும் பல சமூகக் கிளர்ச்சிகளையும் அனுபவித்தது. இவை மனித இயல்பில் உள்ள கேவலமான சுபாவங்களை வெளியில் கொண்டுவந்தது. இப் பிரகடனம் நமது பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு அன்னியமானதல்ல. பாரதத்தில் வாழ்ந்த பேரறிஞர்களினதும், திருவள்ளுவர் போன்ற தவமுனிவர்களினதும் போதனைகளின் எதிரொலிப்பை இப் பிரகடனங்களில் காணலாம். சகல மக்களது உள்ளார்ந்த கௌரவத்தையும், சித்திரவதை செய்யப் படுவதிலிருந்தும், எதேச்சையான சிறைவைப்பில் இருந்தும் விடுதலைபெறுவதையும், பேச்சுச் சுதந்திரத்தையும் இப்பிரகடனம் உறுதிப்படுத்துவதோடு நின்று விடாது மக்களை அன்னியப்படுத்தக் கூடிய சமூகக் காரணிகளை அழித்தொழிக்கவும் வழிவகுத்துள்ளது. சுருக்கமாகக் கூறுவதாயின், மனித குலம் இதுவரை அனுபவித்த ஆழ்ந்த துன்பங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து மனித இனங்களிடையே பரஸ்பர உறவுகளைக் ஏற்படுத்த வேண்டுமாயின் மக்களின் அடிப்படை உரிமைகளை, நாம் மீறக்கூடாது என்பதாகும். குறிப்பாக ஒவ்வோர் நாட்டரசாங்கமும் மக்களின் உரிமைகள் பேணப்படுவதை முதற்கடமையாகக் கொண்டிருக்கவேண்டும்.

அமெரிக்கா, இந்தியா, சீனா, சோவியத் ஒன்றியம் போன்ற பெரிய நாடுகளில் இருந்து இலங்கை, இஸ்ரவேல், எல்சல்வடோர் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

சிறிய நாடுகள் வரையிலுள்ள பெரும்பான்மையான அரசாங்கங்கள் மக்களின் உரிமையைப் பேண வேண்டிய அரசின் கடமையை கேலிக்குரியதாகப் பாவித்து வந்ததுமல்லாமல், தொடர்ந்தும் அவ்வாறே நடைமுறைப்படுத்தி வருகின்றன. தமது வசதிக்கேற்ப, சந்தர்ப்பங்களில், மனித உரிமைகள் பிரகடனம், நடைமுறையில் சாத்தியமற்ற உயர்வான இலட்சியங்கள் என்றும் கூறிக் கொள்வர். எவ்வாறு இருந்த போதும் இப்பிரகடனம், உலகளாவிய ரீதியில் மனித உரிமைமீறலுக்கெதிரான எதிர்கொள்ளலுக்கும், முறியடிப்பிற்கும் ஒரு வரையறையை ஏற்படுத்தியது. இது, ஒரு முற்று முழுதான தாக்கத்தை ஏற்படுத்தாவிடினும் ஓரளவுக்காவது நாடுகள் மீது கட்டுப்பாட்டை விதித்தது. மனித உரிமை மீறல்களைப் பொறுத்தவரை, நாடுகளின் "தேசிய இறைமை" என்பதன் அர்த்தம் கேள்விக்குட் படுத்தப்படுகின்றது. எந்த ஒரு நாட்டிலேனும் நடைபெறும் மனித உரிமைகளின் துஸ்பிரயோகம் ஏனைய நாட்டிலுள்ளோரின் நியாயமான கரிசனைக்குட்படுகிறது. பொருளாதார வளர்ச்சியிலும், பலத்திலும் நாடுகளிடையே தரத்தில் அதிக வித்தியாசம் இருப்பதினால், மனித உரிமைகள் போன்ற சர்வதேச உறவுகளில் ஒரு சமனற்ற தன்மையே காணப்படுகின்றது. மனிதஉரிமைகளைக் குறுகிய பார்வையில் வைத்து, ஒரு வசதியான நாடு மற்றய நாடு களிற்கு நெருக்கடி களைக் கொடுக்கவும் பாவிக்கின்றது. இது மனித உரிமைகளைப் பேணும் செயற்பாடுகளை அர்த்தமற்றதாக்கிய போதிலும், மூன்றாம் உலகநாடுகள் போன்றவற்றின் மக்கள் மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு எதிர் நோக்கும் தடைகளை காண்பிக்கின்றது. இவ் அரசுகள் மனிதஉரிமைகளை துஸ்பிரயோகம் செய்வதை வலுவான ஆதிக்க சக்திகள் பல மூன்றாம் உலக நாடுகளில், அம்மக்கள் பல இடையூறுகளிடையே வென்றெடுத்த சமூக பொருளா தார உரிமைகளை மீளப்பறிப்பதற்கும் பாவிக்கின்றன. இந்த சந்தர்ப்பவாத சூழ் நிலையில், மனித உரிமைகளுக்காக கறாராக, இடைவிடாது போராடுவதற்கு சர்வதேச அரசசார்பற்ற அமைப்பு களிடையே மனித உரிமைகள் பற்றிய தெளிவான பார்வையும், தொடர்ச்சியான ஒழுங்கமைப்பும் அவசியமானதாகும். இது இப்பொ



படிப்பகம்

www.padippakam.com

முது கருத்தளவில் வடிவம் பெற்று வருகின்றது. இந் நிலை மனிதஉரிமைகளை வென்றெடுப்பதற்கான நடைமுறையின் ஆரம்பப் படிநிலையே.

மனிதஉரிமைகளை மீறும் அரசாங்கங்கள், எல்லா மக்களையும் ஒன்று சேரப் பாதிக்கும் தேசிய நலனை முன்னிட்டு சில தனிநபர் களைக் கொல்வது அல்லது சித்திரவதை செய்வது போன்ற மனித உரிமை மீறல்கள் நடைபெறுவது தவிர்க்க முடியாதது எனப் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் வாதிடுகின்றன. மனித உரி மைகளை வன்மையாக மீறிவரும் சக்திகளுடன் இணைந்த புத்திஜீவிகளும் இதேபோன்ற வாதங்களை முன்வைப்பது வழமையாக உள்ளது. பெருந்தொகையான மக்களிற்கு தொழில் செய்யும் உரிமை, மருத்துவவசதி, கல்வி, தங்குமிடவசதி போன்ற உரிமை களைப் பாதுகாக்க தனிப்பட்டோரை நசுக்குவது அவசியமெனக் கம்யூனிச அரசுகளுக்கு அனுதாபம் காட்டுவோர் கூறுவர். இவ்வாறான எண்ணப்போக்குகள் தவறானவை என்பது இன்று தெளிவாகக் காணப்படுகின்றது. ஏனெனில் திட்டமிடப்பட்ட முறையில் மனித உரிமைகளை மீறும் அரசுகள் பொருளாதார, அரசியல் ரீதியில் வீழ்ச்சியடைந்து அல்லது மிகவும் நெருக்கடியான நிலையில் இருப்பதையே இன்று காணக்கூடியதாக உள்ளது. இந் நாடுகளில் இருந்த ஊழல்களும், ஏமாற்றுக்களும் காலப்போக்கில் அம்பலமாகியுள்ளன.

ஆகையால் மனிதஉரிமைப் போராட்டங்களை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் வைத்துப் பார்க்கவேண்டியது அவசியமாகும். அதாவது மக்களிற்கு நல்வாழ்வழிப்பதற்கு கல்வி, இருப்பிட வசதி, நியாயமான ஊதியம் இவை யாவற்றுடன் மேலாக பயமின்றி வாழ்வதற்கான சுதந்திரம் போன்றவற்றை உத்தரவாதப் படுத்துவது அவசியமாகும். மதநம்பிக்கை உடையவர்கள் கூட ஆத்மீகத் தளத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். இன்று மிருகங்களின் நல்வாழ்விற்கான உரிமைகளும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்ப



படிப்பகம்

www.padippakam.com

தற்கான தேவை களும், மனிதனின் மகிழ்ச்சியான ஆரோக்கியமான வாழ்விற்கு அவசியமானவை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

தனியொருவன் தான் கொண்டிருக்கும் நம்பிக்கைகளுக்கும் அபிப் பிராயங்களுக்குமாக, அவனது குரலை ஓங்கவிடாது செய்வதும், காவலில் வைத்தும் கொல்லப்படவும் கூடுமானால், இச் செய்கை யானது மிகவும் பாரதூரமானது மட்டுமல்லாமல், சமுதாயத்தின் ஏனைய சுதந்திரங்களைப் பாதிப்பதுடன், மக்களின் நல்வாழ்வையும் பயமுறுத்துகின்றது. வித்தியாசமான கண்ணோட்டத்தில் உலகினை நோக்கி பழைய சித்தாந்தங்களில் இருந்து புதிய சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்லமுனைவோரின் செயல்களை சகிக்கமுடியாத சமுதாயம் ஒரு ஒடுக்கப்பட்ட சமுதாயமாகவே தொடர்ந்தும் இருக் கும் என்பதில் சந்தேகமில்லை. இதனாலேயே தனிப் பட்டவர்களின் சுதந்திரங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சிறப்பான சர்வதேச ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பொருளாதார ரீதியில் சமத்துவமற்ற நிலையில் ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவை அர்த்தமற்றவை என்பது பலராலும் முன்வைக்கப்படுவது வழக்கம். எனவே பொருளாதார ஏற்றதாழ்வை அகற்றிய சமுதாயத்திலேயே இதற்கு அர்த்தம் உண்டென்பர். அச் சொற்களின் பூரண அர்த்தம் அவ்வாறான சமூகங்களிலேயே அர்த்த புஷ்டியானதாகும். ஆனால் அச்சமுதாய மாற்றம் என்பது மந்திர வித்தையால் விளையக்கூடிய ஒன்றல்ல. அதற்கான போராட்டம், இருக்கின்ற வரையறைக்குள்ளான ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை மேலும் பரவலாக்கும் நோக்கிலும், அதற்கான அரசியல் நிறுவனங்கள், அரசு, சிவில் சமூகம் என்பவற்றினதும் உருவாக்கத்திலும் தங்கியுள்ளன. உலக அனுபவங்கள் இவற்றை ஒன்றுடன் ஒன்று பிரித்து இயந்திர ரீதி யாக முதலில் பொருளாதாரம், பின்னர் ஜனநாயகம் எனப் பார்க்கும் பார்வையின் தவறை எமக்குக் காட்டியுள்ளது. இவை ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை என்பதைக் கணக்கிற் கொள்ளவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலைப் போராட்ட சூழலில்:

முன்பு குறிப்பிட்டபடி, 70பதுகளில் தமிழர் பிரச்சினைகளில் இருந்த பலவிதமான சிக்கல்களையும் அறிந்து அவற்றுக்கு முகம் கொடுக்க முனைந்த இளைஞர்களில் பலர், ஒரு பரந்த நோக்குடைய மனித உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தனர் என்பது தெளிவாக இருக்கின்றது. இதில் ஓர் சீரழிந்த அதிகாரஉறவுமுறை கொண்டநம் அமைப்பில் முஸ்லீம் , சிங்கள மக்களும் ஒடுக்கப்பட்டுள்ளார்கள் என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் விடுதலைப்போராட்டம் ஓர் பரந்தபொதுமைப் பண்பையும் உள்ளடக்கியது என உணரப்பட்டது.

எமது விடுதலைப் போராட்டமானது, அதிகரித்துச் செல்லும் அடக்குமுறைகளுடன் கூடிய மலைபோல் குவிந்த மனிதஉரிமைகள் துஷ்பிரயோகத்தின் போதே ஆரம்பித்தது. அனேகமான விடுதலைப் போராட்டங்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலேயே தோன்றியிருக் கின்றன. ஆகையால் விடுதலை இயக்கங்கள் மனித உரிமைகளின் அவசியத்தை உணருவது மாத்திரமல்லாமல், அவற்றைக் கடைப் பிடிக்க தம்மாலான முயற்சிகள் எல்லாவற்றையும் எடுப்பார்கள் என்றே கருதப்பட்டு வந்தது. இதனால் உலகெங்கும் உள்ள மனித நலன்களுக்கு ஊக்க மளிக்கும் சக்திகளும், செய்தித் துறையில் குறிப் பிடத்தக்கோரும், சில அரசாங்கங்களும் கூட விடுதலை இயக்கங்க ளுக்கு, இவை எதிராகப் போராடும் அரசாங்கக்களை விட மேலான நெறிமுறையான அந்தஸ்தினை வழங்கின. உண்மையில் தமிழர் போராட்டத்தில், எண்பது களில் இந் நிலைமையே காணப்பட்டது. மேற்குறிப்பிட்ட நம்பிக்கைகளையும், அனுதாபங்களையும் பயன்படுத்தி அதிகாரத்தை ஆதாயமாக்க முனைந்து கொண்டிருக்கும் இயக்கங்கள், தொடர்ச்சியாக திட்டமிட்ட முறையில், மனித உரிமைகளை மீறியும், துஷ்பிரயோகம் செய்தும் வருவதை, தமிழராகிய நாம் கண்டிக்காமல் இருக்க முடியாது. இப்பொழுதே நாம் கண்டிக் காது விடுவோமாயின்,



படிப்பகம்

www.padippakam.com

சந்தர்ப்பவாதிளாகவும், மோசக்காரர்களாகவும் நாம் முத்திரைகுத்துப் படுவதுடன், எம்மீது அக்கறை கொண்டுள்ளோரின் அனுதாபத்தையும் இழக்க நேரிடும். இது மேலும் நம்மை நாமே அழித்துக்கொள்வதாகவும் முடியும்.

நாம் முன்பு கூறியதுபோன்று, மனிதஉரிமைகள் என்பது சட்டப்புத்தகத்திலிருந்து எழுவதில்லை. சகமனிதர் மீது கரிசனை கொண்ட ஆக்கபூர்வமாக சிந்திக்கும் மக்கள் இயல்பாகவே இவ் உரிமைகளை உணர்ந்து அவற்றை நிலைநாட்ட உழைப்பர் எண்பது களில், பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் கையாள போராளிகளில் ஒரு பகுதியினர் முயன்றனர். குற்றம், முறை கேடான சமுதாய வழக் கங்கள், ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளைத் தீர்க்க உடலூறு விளை விக்கும் தண்டனைகள் தரப்படுவதை விட, அவற்றைத் திருத் தும் வழிவகைகளே மேலானவை என வலியுறுத்தப்பட்டது. அரசி யல் எதிரிகளை அணுகும் பொழுது, அவர்களைக் கொல்வதற்கு முயலாமல் அவர்களின் கருத்துக்களையும் செயல்களையும் அரசியல் ரீதியில் எதிர்த்தனர். இப்படிப்பட்ட ஆரம்பகால கருத்துப்போக்குகளில் சில, பின்னர் விளைந்த துர்ப்பாக்கியமான கருத்துப் போக்கினுள் அமிழ்ந்து போயின.

தனிப்பட்ட ஒவ்வொருவரினதும், உள்ளார்ந்த சிறப்பான இயல்புகளை வெளிக்கொண்டுவரவும் பிரச்சினைகளுக்கு இணக்கமான முறையில் தீர்வுகாணப்படவேண்டும் என்னும் மனப்பாங்குள்ள சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்காக உழைப்பதன் மூலமே மனிதஉரிமைகளைப் பரந்த முறையில் நிலைநாட்டலாம். இந்த மனப்பாங்கை வளர்ப்பதற்கு, பொறுமையும், மனிதாபிமானமும், இடைவிடாத சுயவிசாரணையும் அவசியமானவையாகும். இது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை யும் உள்ளடக்கும்.

மறுபக்கத்தில் மற்றவர்கள்மீதும் எமக்கொரு கடமையுள்ளது என்பதை உணராது, மற்றவர் களின் கட்டுப்பாடற்ற செயல்களில் தமது



படிப்பகம்

www.padippakam.com

செயற்பாடுகளை ஆதாரமாக்கிக் கொண்ட ஒரு போராட்டமானது, தங்களிலும், எதிர்த்துப் போராடும் சமூகத்திலும் உள்ள இழிநிலைகளையே வெளிக்கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை. இதுவே விடுதலைப் போராட்டத்தில் எமது பாடமாகும். சிங்கள, முஸ்லீம் பொது மக்களை படுகொலைசெய்யும் இழிநிலையடைந்த போராட்ட இயக்கங்கள், தமது சொந்த மக்களுக்கு இவற்றிலும் கூடிய வேதனைகளைக் கொடுப்பது ஒன்றும் தற்செயலானதல்ல. போராட்ட இயக்கங்கள் தாய்தந்தையரிடம் இருந்து பிள்ளைகளைப் பறித்து, அவர்களைக் கொலைகாரர்களாகவும், கொடுமையில் மகிழ்ச்சி அடைபவர்களாகவும், சித்திரவதை செய்பவர்களாகவும், தற்கொலை இயந்திரங்களாகவும் மாற்றி அமைத்துள்ளன. மேலும், இவை சாதாரணமக்களைப் பொய்யர்களாகவும், சந்தர்ப்பவாதிகளாகவும் காட்டிக்கொடுப்பவர்களாகவும் மாற்றமுனைகிறது. சுருங்கக் கூறின், ஈழமானது எம் மக்களின் சித்திரவதைக் கூடமாகவே மாறிவருகின்றது. இது விடுதலையின் உண்மையான தார்ப்பரியத்தையே தலை கீழாக மாற்றிவிடுகின்றது.

ஆகவே மனித உரிமைகளை மதிப்பவர்கள், 1983ம் ஆண்டு இனக் கலவரத்தைப் போன்று அசிங்கமான வன்செயல்களை நோக்கும்போது, சகல சிங்களமக்களையும் காட்டுமிராண்டிகளாகவும், கொலைகாரர்களாகவும் முத்திரை குத்துவதான எழுந்தமானமான அணுகு முறையைக் கையாளமாட்டார்கள். ஆனால் இவர்கள் இந்த வன்முறைக்குப் பின்னால் உள்ள அரசியல் சக்திகளையும் அமைப்புகளையும் அடையாளம் கண்டு, நேசசக்திகளின் உதவிகளோடு அவற்றத் தனிமைப்படுத்தி, புறம்போக்கவே முயல்வார்கள். இதன் முடிவில் எங்களிலும் சிங்களவரிலும் உள்ள நல்ல இயல்புகள் வெளிக்கொண்டு வருவதாக இருக்கும். இப்படியான மனநிலையை அடைவதே உண்மையான விடுதலையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள். (யாழ்ப்பாணம்)

இது இலங்கையின் சகல பல்கலைக் கழகங்களினதும் விரிவுரை யாளர்களடங்கிய பல்கலைக்கழக ஆசிரியர் மனிதஉரிமைக் குழுவின் யாழ்ப்பாண அங்கமாக 1988ம் ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப் பட்டது. இலங்கையின் தெற்குப் பகுதியில், இக்காலகட்டத்தில் முன் னொருபொழுதும் இல்லாதவாறு ஜே.வி.பி இன் எழுச்சியின் பின் னணியில் வன்முறைகளும் பதில்வன்முறைகளும் தலைதூக்கின. வடக்குக்கிழக்கில் போராட்ட இயக்கங்கள் தம்மைக் கொலை இயந் திரமாக மாற்றிப் போட்டியிட்டுக் கொண்டன. அதிகாரம் எடுத்துக் கொள்வதற்காகவோ அல்லது தன்னிடம் உள்ள பயம் காரணமாகவோ அல்லது தமது பிரசன்னத்தை தெளிவுபடுத்துவதற்காகவோ பொது மக்களில் சிலரைப் பொறுக்கி எடுத்து பலிக்கடாவாக்கிக் கொன்றனர். அயலவரின் கொலைக்கான காரணத்தைக் கேட்ட போது, பெரும் பான்மையான நேரங்களில் சரியான விடைகிடைக்கவில்லை. அதற்கு விடைகிடைத்த சந்தர்ப்பங்களில், அது எந்தளவுக்கு தங்கள் பாதுகாப் பிற்கு உதவும் என்பதிலேயே மக்கள் கவனமாக இருந்தனர். கார ணம் கிடைக்காத நிலை மிகவும் பயமுறுத்தும் அனுபவமாக மாறி வந்தது.

மேலும், பழிவாங்கும் கொடூரத்தன்மையைப் பொறுத்தவரையில் தமிழருக்கும் சிங்களவருக்கும் வித்தியாசமில்லையென்றே சம்பவங்கள் நிரூபிக்கின்றன. எமக்கு இது, கடந்தகால நிகழ்வுகளை நுட்பமாக ஆராய்ந்து, எல்லோருக்கும் நன்மைதரக்கூடிய ஒரு நல்ல எதிர் காலத்தை நோக்கி உழைப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை



படிப்பகம்

www.padippakam.com

தந்தது. ம.உ.ப.ஆ (யாழ்ப்பாணம்) கிளையிலிருந்தோரில், முன்னோடியாக தீவிரமாக இயங்கியவர்களில் ஒருவரான டாக்டர் (திருமதி) ராஜனி திராணகமவின் எண்ணங்கள், செயல்கள் யாவுமே மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவர் ஆயுதப் போராட்டத்தின் பெரு வீழ்ச்சியை உள்ளிருந்தே அனுபவித்தவர். அனியாயமாக அணைந்த ஒவ்வொரு மனிதஉயிரும் கணக்கிடப்பட வேண்டுமெனவும், அதற்குப் பொறுப்பானவர்கள் கண்டிக்கப்பட வேண்டும் எனவும் ராஜனி தீவிரமாக நம்பினார். நாம் எம்மைப் பற்றிய உண்மைகளுக்கு முகம் கொடுப்பதுடன், வன்முறையானது, இந்திய அமைதிகாக்கும் படை, இலங்கை அரச படை, எமது போராளிகள் போன்ற எவற்றினிடமிருந்து வந்தாலும் அவற்றைக் குறிவைப்பது எமது செயற்பாடுகளில் ஒன்றாகும். இவ்வாறு மனித உரிமைகள் வரலாற்றில் புதிய தளத்தை ஏற்படுத்த முயற்சித்தோம். உலகில் பலசாராரும் எமக்குத் தந்த ஆதரவு எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

இந்திய அமைதிகாக்கும் படையின் வருகையின் பின் ஏற்பட்ட அசாதாரணமான நிலைமையால், யாழ் பல்கலைக்கழகத்திலிருந்தோர், சாதாரண மக்களினதும், மாணவர்களினதும் துன்பங்களையும், குறைகளையும் எடுத்துக் கூற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அப் போதிருந்த நிலைமை ஆபத்தானதும், நிலையற்ற தென்பதனையும், வன்முறைக்கெதிராக குரல் கொடுப்பதில் வரும் சிறு பலத்தையும் மக்களைப் பலப்படுத்துவதிலேயே பாவிக்கவேண்டும் என்பதனையும் ராஜனி நன்குணர்ந்திருந்தார். ஒரு நிரந்தரமான நீதியான சமூகதாயத்திற்கு, பலம் வாய்ந்த மக்களே அஸ்திவாரமாக அமைய வேண்டும் என ராஜனி நம்பினார். ஆகவே மனித உரிமை மீறல்களின் வெளிப் படுத்துகை, நன்மைபெறக் கூடியதாகவும், அர்த்த முள்ளதாகவும் இருக்கவேண்டும். இதற்கான அரசியல் ஏற்பாடுகளை அங்கீகரிக்கப்பட பாடுபடவேண்டும். புலிகள் மீது அனுதாபம் கொண்ட மாணவர்களை, இந்திய அமைதிகாக்கும் படை பிடித்துச் செல்லும் போது அவர் களை விடுவிக்கப்பாடுபட்டதுடன், அம்மாணவர்களோடு அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com

அழிவுப் போக்கைக் கைவிட்டு விலகும்படி பல முறை வாதாடி இருக்கின்றார். விடுதலை இயக்கமானது சமுதாயத்துள்ளும், மாணவர் களுள்ளும் நம்பிக்கை, திறந்த மனப்பாங்கு, நட்பு ஆகியவற்றைப் பலப்படுத்தவேண்டும் எனவும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். அவர் மனித இயல்புகளை இழிவுபடுத்தும், போராட்டத்தின் நிலைபற்றி ஆழ்ந்த கவலைகொண்டிருந்தார். வெளிப்படையாக நடந்து கொள்வதால் தனக்கேற்படக் கூடிய ஆபத்துகள் பற்றியும் உணர்ந்திருந்தார். சமுதாயத்தில் போர்க்கால சூழ்நிலையில், மனநிலை குழம்பியுள்ள பெண்களைத் தேற்றுவதிலும் அவர்களின் சுயமரியா தையை உறுதிசெய்வதிலும் முன்னின்று உழைத்தார்.

1989ம் ஆண்டின் மத்திய பகுதியில் இருந்து நிலமை வேகமாக மாறியது. புலிகளுக்கும் பிரேமதாசாவுக்கும் இருந்த உறவுகளுடன், ஆபத்தான நிலைமை உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்திய அமைதி காக்கும் படையும் அதன் சார்பியக்கங்களும் தமிழ்தேசிய இராணுவத் துக்கென வாலிபர்களைச் சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொழுது, அவர்களின் செயல்கள் மிகவும் கேவலமானதாக இருந்தன. கொலைகளும், பதில் கொலைகளும் பெரியளவில் வேகமாக அதிகரித்தன. 1989ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21ம் நாள் வேலையில் இருந்து வீடு திரும்புகையில் ராஜனி ஒரு கொலையாளியினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்திய அமைதிப்படை வாபஸ் பெறும் அறிக்கைவிட்ட அடுத்தநாளே, இக்கொலை நடைபெற்றது குறிப் பிடத்தக்கது. மருத்துவ கல்விப்போதனையிலும், சமூகசேவையிலும் தன்னை அர்ப்பணித்து ராஜனி காட்டிய ஆர்வமும் சேவை மனப் பாங்கும் எதிர்காலத்தில் வரவிருக்கும் ஆட்சியாளர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர் கொலை செய்யப்பட்ட சூழ்நிலை, இந்திய அமைதிகாக்கும் படையில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகை யில் மிகச்சாதுரியமாகவே திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கொலை செய்தவர்களின் தொடர்புகள் மிக விரைவிலேயே தெளிவாகியது. அவரது அனுதாபத்தை நாடிய புலிஇயக்கத்திற்கு சார்பான மாணவர்கள் சிலரின் **புதிய போக்கைப் பார்க்கும் பொழுது**



படிப்பகம்

www.padippakam.com

**நம்பிக்கைத் துரோகமே விடுதலையின் புதிய வழிமுறையாக அமையும் என்றே தோன்றுகின்றது.**

புலிகளுக்கு, அவரின் கொலையை மறுப்பதற்கு 60 நாட்கள் எடுத்தன. அவரது வாழ்க்கையையும், சேவையையும் பாராட்டு முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட ஞாபகார்த்த விழாவிற்கு சர்வதேசப் பிரதிநிதிகள் வந்தமையினாலே, இவ்வறிவித்தல் விடப்பட்டது. ஆனால் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களில் ஒரு சாரார் அவர் இறந்த நாளில் இருந்தே, கொலையை நியாயப்படுத்தும் வகையில் அவரின் நடவடிக்கைகள் பற்றியும், இயல்புகள் பற்றியும் கீழ்தரமான பிரச்சாரத்தில் இறங்கியிருந்தனர்.

# வரலாற்றுப் பார்வையில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள். (யாழ்ப்பாணம்)

1989ம் ஆண்டு புரட்டாதியில் இருந்து எமது சமுதாயம் சந்தித்த அடக்குமுறைகள் துன்பதுயரங்கள் மத்தியிலும், ம.உ.ப.ஆ. யாழ்ப்பாணக் கிளை அதன் நோக்கங்களுக்காக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. அது வடக்குக் கிழக்கில் நடைபெறும் வன்முறைகளை வெளிக்கொண்டு வருவதுடன் அவற்றின் இயல்புகளை ஆராய்ந்து போரில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரினதும், அழிவுப்பாதையில் செல்லும் அரசியலையும் எடுத்துக் கூறிவருகின்றது. ராஜனியின் கொலை தொடங்கி, பல பின்னடைவுகளை சந்தித்த போதும்,



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. பொதுமக்களும், சர்வதேச நேசசக்திகளும் இக்கொலைக்கெதிராகக் காட்டிய அனுதாபத்தாலும், ஆதரவாலும்தான் யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு வருடம் இருக்கக் கூடியதாக இருந்தது. 1990ம் ஆண்டு ஆனிமாத யுத்தத்தின் பின் வந்த அடக்குமுறைகளோடு, எமது நெருக்கடிகள் மேலும் மேலும் அதிகரித்தது. இக்காரணத்தால் எமது தளத்தையும், வேலையில் பங்கெடுத்துக் கொண்டோரையும் யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து அகற்றவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அத்துடன், அரசினாலும் ஜே. வி. பி இனாலும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத்திற்கு முகம் கொடுக்கும் வலிவின்மையால் தேசிய பல்கலைக் கழக மனித உரிமைக்குழு செயலிலந்து போனது. ஆனால் தெற்கிலிருந்த ( ம. உ. ப. ஆ. ) சகோதரர்கள் பலர் எமக்கு தனிப்பட்ட முறையில் எமக்கு உதவி செய்தனர்.

தியாகமனப்பான்மை, கொள்கைப்பிடிப்பு, பரஸ்பர புரிந்துணர்வு போன்ற நீண்டகாலமாக வேரூன்றிய பண்புகளினாலேயே, பண்பு களைச் செயலில் காட்டும் சாதாரண மக்களின் வாழ்க்கையினாலேயே இன்னும் நாம் உயிர்தப்பி வாழக்கூடியதாக உள்ளதேயன்றி தனி மனிதரின் வீரதீரச் செயல்களால் அல்ல. அரச சமூகத் தடைகளுக் கெதிராக போராடுவதற்கான அரசியல் வேலைத்திட்டமும், அர்ப்பணிப்பும், எமது பாரம்பரியத்தில் ஊறியுள்ளதென்பதை 70ம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எம்மவருள் காணக்கூடியதாக உள்ளது. இது பற்றி முன்னரும் கூறியுள்ளோம். ஆரம்பகாலங்களில் விழிப் புணர்வுகளால் தூண்டப்பட்டவர்களில் பலர், பிற்கால வேதனைக்குரிய சம்பவங்களில் விரக்திக்கும் தனிமைக்கும் மாத்திரமல்ல, சிலவேளை களில் அதைவிட மோசமான சம்பவங்களுக்கும் தள்ளப்பட்டனர். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையில் சகல தரத்திலும் உள்ள மக்களும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் எமது விடுதலைக்கு முக்கியமானவர்களாக இருந்தும், பராமரிக்கப்படாமல் இருக்கி றார்கள். குறிப்பாக ராஜனியின் கொலையின் பின்பு, முன்பு குறிப் பிட்ட பலரின் ஆதரவாலும், அனுதாபத்தாலும் மட்டுமே ம.உ.ப.ஆ.



படிப்பகம்

www.padippakam.com

இத் திருப்பங்களுக்கு முகம் கொடுக்க் கூடியதாக இருந்தது.

பிறர் நலன்களுக்கு உழைக்கும் ஆர்வமும், தியாக மனப்பக்குவமும், அறிவுபூர்வமாகன வழிநாடும் எண்ணமுள்ள சமுதாய மரபுகளில் வந்த பலருள் ராஜனியும் ஒருவராவார். சமுதாயத்தை அழித்துக் கொண்டிருக்கும் அதிகார வெறிகொண்ட சில தனிப்பட்டோருக்கு தன்ஆதரவையும், ஊக்கத்தையும் கொடுத்ததாக வேறும் பலர் உணர்ந்தது போல் அவரும் அறிந்து கொண்டார். இக் கவலை ஒரு புதுச்சக்தியின் ஊற்றாக அமைந்தது. அவர் தனக்கு என்ன நேர்ந்தாலும் தம்மையும் நம் சமுதாயத்தையும் அழிக்கும் பாதையில் செல்வோரைக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கில் ஈடுபட்டார். வேறும் பல வாலிபர்களும் பெண்களும், மாணவதலைவர்களும் இது போன்ற அனுபவங்களையே பெற்றனர். போராட்டங் களின் திகைப்பான திருப்பங்களினால் சமுதாயத்திற்கு ஏற்பட்ட துயரங்கள், எண்பதுகளில் மாணவதலைவர்களின் விதிகளில் எதிரொலித்தது. சிலர் இக் கொடிய விதிகளில் இருந்து விடுபடுவதற்காகவே சாவை வரவேற்றனர். சிலர் தற்கொலை செய்துகொண்டனர். வேறும் சிலர் மயிரிழையில் உயிர் தப்பி நாட்டை விட்டு வெளியேறி உயிர் தப்பிக் கொண்டனர். அழிவை ஏற்படுத்தும் சக்திகளை வெளிப்படையாக எதிர்த்தமையால் விமலேஸ்வரன், ராஜனி போன்றோர் கொல்லப்பட்டனர். மேலும் பலர், புலி களின் பாதாளச் சிறைகளில், மனிதத் தன்மையை இழிவுபடுத்தும் சித்திரவதைக்கு உள்ளாகி வருகின்றனர். வரலாற்றின் சோகச்சுமைகளை நன்கறிந்த இவர்கள், பல அம்சங்கள் கொண்ட போராட்டம் பற்றி சிறிதளவேனும் அறிவுமற்ற, தீய சக்திகளினால் இயந்திரங்களாக்கப்பட்ட சிறுவர்களினால் சித்திர வதைக்கும் அவமானத்துக்கும் உள்ளாகி வருகின்றார்கள்.

மனிதஉரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தொடர்ந்தும் பழைய போராட்டத்தின் பாரம்பரியங்களைப் பிரதிநித்துவப்படுத்து கின்றது. தமது முழு ஆற்றலையும் சமுதாய நலனிற்காகக் கொடுக் கும் மனப்பக்குவம் உள்ளோரின்சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுவதுடன்,



படிப்பகம்

www.padippakam.com

தம் உயிர்களையும் சோகமான முறையில் பலிகொடுத்தவர்களை நினைவு கூர வரலாற்று ரீதியில் நாம் கடமைப்பட்டுள்ளோம். இதுவே நமது சமுதாயம் புத்துயிர் பெற அவசியமானது என நாம் கருதுகின்றேம். ராஜனியும் அவரைப்போல் இறந்த மற்றும் பலரும் இதையே விரும்பியிருப்பார்கள். இறந்த பல்லாயிரக் கணக்கானோரில் பலர் ஈவிரக்கமற்ற அரசபடைகளினால் கொல்லப்பட்டனர். மற்றும் பலர் பிரச்சார இலாபங்களுக்காகவும், சிலர் மனச்சாட்சிக்கு விரோ தமாக எதுவும் செய்ய முடியாமலும் உயிரிழந்தனர். போராளிகளாக இருந்தோர் விதிவசமாக துரோகிகளாக அல்லது மாவீரர்களாக உயிரிழந்தனர். வேறு பலபிள்ளைகள் தாய் தந்தையரிடம் இருந்து பிரிக்கப்பட்டு நடமாடும் மனித வெடிகுண்டுகாகப் பாவிக்கப்பட்டனர். தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் பலகுரல்களில் ஒன்றாக ம.உ.ப.ஆ. (யாழ்) இருக்கின்றது. இவ்வாறான சக்திகளை அழிப்ப தற்காக, எம் சமுதாயத்தில் முன் எப்போதும் இல்லாத வகையில் பயங்கரவாதம் தலைதூக்கியதுடன் ஆயிரக்கணக்கானோர் சிறைப் பிடிக்கப்பட்டும் உள்ளனர் என்பதும் பலரும் அறியப்படாதஉண்மை. ஆதிக்க வெறி கொண்டோர் மறைக்க முயலும் பல விடயங்களை உயிராபத்துள்ள போதும்கூட மறைவாக இருந்து கொண்டு பலர் துண்டுப்பிரசுரங்கள் மூலம் உலகிற்கு வெளிப்படுத்துகின்றார்கள். இப் பிரசுரங்களை வெளிநாடுகளில் இருந்து வெளிவரும் பல தமிழ் பிரசுரங்கள் வெளியிடுகின்றன.

நாம் வேறும் பலருக்கு கடமைப்பட்டிருக்கும் காரணத்தாலும், எமது பணியை தொடர்ந்தும் சிறப்பாக செய்யவேண்டிய காரணத்தாலும், தனிப்பட்டோரை முதன்மைப் படுத்துவதைத் தவிர்க்க விரும்புகின் றோம். எம்மிடம் ஒரு முறையான அமைப்பு இல்லாத பொழுதிலும் எம் பணியிலும் இலட்சியத்திலும் பங்கெடுக்க விரும்புவோரை, எம்மில் ஒருவராக ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழரின் எதிர்காலமும் மனித உரிமைகளின் முக்கியத்துவமும்

குறிப்பாக, 1983 ஆடி மாதத்தில் இருந்து, சிங்களப் பேரினவாதத்தில் மூழ்கியிருந்த சிறீலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகளே தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அனுதாபத்தைத் தேடித்தந்தது. 1987ம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படை வருமுன்பே கொல்லப்பட்ட தமிழர்களின் தொகை 20,000 க்கும் மேலாக இருந்தது. மேலும் எண்ணிக்கையில் பத்தாயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் முதலில் இந்திய அமைதி காக்கும் படையினராலும் பின்னர் தொடர்ந்து வந்த இலங்கை இராணுவத்தின் நடவடிக்கையாலும் கொல்லப்பட்டனர். சிங்களப் பேரினவாதத்தின் நேரடி விளைவாக சிங்கள மக்களே, பல துன்பங்களுக்கும் இகழ்ச்சிகளுக்குமுள்ளாகி இருக்கின்றார்கள். ஜே. வி. பி கிளர்ச்சிக்காலத்தில் 40,000 க்கும் அதிகமான சிங்களமக்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். 1990ம் ஆண்டு ஆனி மாதத்தின் பின்பு சிறீலங்காப்படைகள் பல படுகொலைகள் புரிந்துள்ளார்கள் என்பதனை நோக்கும் போது, மேற்குறிப்பிட்ட சோக வரலாறுகளில் இருந்து, அவர்கள் எதையும் படிக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

சிறீலங்கா அரசின் மேற்குறிப்பிட்ட தவறுகளின்முன், எம்மில் பலருக்கு, ஆதிக்கவெறிகொண்ட எமது அரசியல் போக்கினை நியாயப்படுத்தக் கூடியதாக உள்ளது. பொதுவாக தமிழர்களிடம் புலிகள் பற்றிய வலுவான விமர்சனக் கணிப்பீடு இருந்தாலும், புலிகள் அழித்தொழிக்கப்பட்டால் இலங்கை அரசு என்ன செய்யும் என்ற குழப்பம் உண்டு. இத்தகைய சிக்கலான நிலமைகளைத் தீர்க்கும் முகமாக எம்மை நாமே, சில முக்கியமான கேள்விகளை



படிப்பகம்

www.padippakam.com

கட்டாயம் கேட்டுக்கொள்வதோடல்லாமல் உண்மை நிகழ்வுகளை மிகநுட்பமாக ஆராயவேண்டும்.

முதலில், சிங்கள, தமிழ்மக்களுக்கு அழிவைத் தேடித்தந்த, குறுகிய நோக்குடைய தேசிய இனவாதப் போக்கை தொடர்ந்தும் ஆதரிப்பது அறிவான செயல்தானா? இரண்டாவதாக, ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட பலரை துரோகிகள் என முத்திரை குத்தியதுடன், சமுதாய விழிப்புணர்வுள்ள பலரை சித்திரவதை செய்து, விரக்திக்குள்ளாக்கி, கொன்றதுடன் சிறுவர்களைக் கொடுமைக்காரர்களாகவும், கொடுமையில் லாபமடைகிறவர்களாகவும், தற்கொலை இயந்திரங்களாவும், மாற்றி அமைக்கும் மிகத்தாழ்ந்த நிலையை அடைந்து கொண்டிருக்கும் அரசியல், சுபிட்சத்தைப்பெற்று ஒரு விடுதலையைத் தருமா? இச் சம்பவங்களுக்கு உடனடியாக ஒரு நிறுத்தம் காணாவிடில், எமது சமுதாயத்தின் எதிர்காலம் சின்னாபின்னமாகி சிதைந்து போகும்.

கொடுமையான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர் நோக்கும் தமிழ்மக்களின் நிலைமை குழப்பமானதாக இருப்பதால், தார்மீகம், ஜனநாயகம், விடுதலை என்பவை பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க முடியாது என சிலர் கூறக்கூடும். உயிர் தப்பி வாழ்வதே முக்கியம். இதற்காக எப்படியும் வாழலாம் எனச்சிலர் கருதுகின்றனர். மேலும் புலிகள் போல் பலமும், தயக்கமும் அற்ற, மனிதர் பால் இரக்கமுமற்ற இயக்கத்தினால் மட்டுமே, தமிழ்மக்களில் ஒரு பகுதியானவர்களையாவது காப்பாற்றமுடியும் எனவும் கருதப்படுகின்றது. பொதுவாக இப்படிப்பட்ட அபிப்பிராயம், தாம் துப்பிப் பிழைப்பதற்கு வழிவகுத்துக் கொண்ட, சமுதாயத்தில் மேல்மட்டடத்தோரிடமே உண்டு. இந் நிலையை அறிவு பூர்வமாக சிந்தித்துப்பார்த்தால், மிகத் தவறானது என்பதும் குறுகியகால லாபத்தினை மட்டுமே கருத்தில் கொண்டதென்பதும் விளங்கும். மேலும் இது சாதாரண மக்களின் ஆற்றல்களை இழிவுபடுத்துவதுமாகும். சித்தரவதைகளினாலும், கொலைகளினாலும் உண்மையான கருத்துக்களை வெளியிடும் சுதந்திரங்களை அடக்கும் ஆதிக்கவெறியர்கள், உண்மைகள் வெளியிடப்படும் போது திகைப்படை



படிப்பகம்

கின்றனர். இப்படிப்பட்ட ஒரு போராட்டம் பலம் வாய்ந்தது எனக்கூறுவது சரிதானா?

இன்றைய போராட்டம், ஒவ்வொருவரையும் அடிவருடியாக அல்லது பொய்யனாக அல்லது சந்தர்ப்பவாதியாக மாற்றி தமிழ் சமுதாயத்தை மிகவும் பலவீனமான நிலைக்குத் தள்ளியுள்ளது. இவை தவிர்க்க முடியாது போராக வெளிப்படும் போது மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் விடப்படுவதையே தொடர்ந்தும் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் புலிகள் தமிழ்மக்களின் நிலையை உணமையிலே பலப்படுத்தி இருக்கின்றார்களா? பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குவதற் கான அரசின் இயலாமை, பிரச்சினையின் ஒருபகுதியாகும் இதிலும் பார்க்க மோசமானநிலை என்னவெனில் , நாம் நியாயமானது எனக் கருதும் கோரிக்கைகளை வெளிப்படையாக மனச்சுத்தியுடன் வைத்து மற்றையோருக்கு நம்பிக்கை கொடுக்கமுடியாத ஒரு நிலைமைக்குள் புலிகளும், தமிழ்மக்களும் அகப்பட்டுக் கொண்டிருப்பதாகும். ஏனெனில் புலிகள் வடக்குக்கிழக்கில் தப்பி வாழ்வதற்கு, மக்களைப் பிடித்து துன்புறுத்தி, கொல்வதற்கான வரையறையற்ற அதிகாரமும், ஆயுத வல்லமையும் வேண்டும். இத்தகைய கோரிக்கையை எமது மதிப்பைக்காக்கும் வகையில் எந்த சர்வதேச அவையிலும் வெளிப்படை யாகக் கூறமுடியாது. தொடர்ச்சியாக வடக்குக் கிழக்கில், கொடூரமான முறையில் முஸ்லீம் மக்களை அன்னியப்படுத்திக் கொண்டிருக்கும் புலிகள், நெறிமுறையான அதிகாரத்தை எப்பொழுதாவது பாவிப் பார்கள் என எண்ணுவது கேள்விக்குரியதாகும். சிங்கள இனவெறி தமிழ் மக்களை நடாத்திய விதம், இலங்கையின் ஐக்கியத்தையும் இறைமையையும் எவ்வாறு பாதித்தது என்பது யாவரும் அறிந்ததே. முஸ்லீம் மக்களிற்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் எவ்வளவு இழப்புக்களை ஏற்படுத்தியது என்பதை ஆராய்ந்து பார்த்தோமா?

சுருக்கமாக, இந்த அரசியலுக்கு நாம் ஆரதரவளிப்பது, எமது கற்பனைகளை வளர்த்துக் கொள்வதற்கு மாற்றான் பிள்ளைகளை

www.padippakam.com

பலிக்கடாவாக்குவதாகும் என்பதை நாம் உணர வேண்டும். மாற்றான் பிள்ளைகள் பெரும்பாலும் ஏழைப்பிள்ளைகளும், கிராமப்புறங்களில் வாழ்வோரும் என்பதை நாம் மறந்துவிடலாகாது. நீண்டகாலமாக, உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பணியாற்றி வரும் மனிதஉரிமை ஸ்தாபனங்கள் ஏற்படுத்திய நெருக்கடிகளினால் கிடைத்த நன்மை களைப் பற்றிப் பார்ப்போம். 1967 இல் நைஜீரியாவில் ஆரம்பித்த "பியஃபிரான்" போர் ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு நீடித்தது. இறுதியில் நைஜீரிய சமஸ்டி அரசு, பியஃபிரான் பொதுமக்களுக்கு உணவு வினியோகத்தை நிறுத்தி, சில மாதங்களில் போரில்வென்றது. பியஃபிரான் போரில் தோற்றது மாத்திரமல்லாது, பெருந்தொகையான மக்கள் பட்டினியாலும் இறந்தார்கள். தெற்கிலங்கையில் உள்ள ஒரு பகுதியினர், யாழ்ப்பாணக்குடா நாட்டில் உள்ள மக்களைப் பட்டினி யாக்கி போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு அச்சுறுத்துகின்றனர். ஆனால் சர்வதேச மனிதஉரிமை ஸ்தாபனங்களின் நெருக்குதலினாலும், தெற்கில் நல்லெண்ணம் கொண்ட ஒரு பகுதியினர் வாழ்வதினாலுமே அரசினால் இவ்வாறு செய்தல் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாமல் உள்ளது. இன்றும் யாழ்ப்பாணத்திற்கு ஓரளவாவது நிவாரணம் அனுப்பப்படுகின்றது. இது போராட்டத்தின் பலத்தினால் நடைபெறவில்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்மக்களிற்கான உணவு வினியோகத்தை முற்றாக நிறுத்தி மக்க ளைப் பட்டினிபோட்டு, எமது பிரதேசத்தைப் பாலைவனமாக்கி, தனி இராணுவரீதியில் போரை வெல்லமுடியும் என்பதில் ஐயமில்லை. மனிதஉரிமைகள் சர்வதேசமயப்பட்டமையால் மட்டுமே வடக்குக் கிழக்கில் ஓரளவாவது அரசநிர்வாகம் நிலைத்திருக்கிறது என்பதை யாவரும் அறிந்து கொள்ளவேண்டும். இந்நிலையில், நாம் சர்வதேச அனுதாபத்தின் முழுப்பயனையும் அனுபவிக்கமுடிகிறதா என்றால் அதுவுமில்லை. இன்று தமிழ் அரசியலில் மேலோங்கி நிற்கும் இயக்கத்தை, சர்வதேச சக்திகள் சந்தேகத்துடனும் வெறுப்புடனுமே நோக்குகினறன. ஆனால் அரசு, தன்பிழைகளை மிகச்சாதுரியமாக மறைத்துக் கொண்டு, தமக்குச் சாதகமான முறையில் வேண்டுதல் களைச் செய்கின்றது. இதனால் எம்மீதுள்ள சர்வதேச அனுதாபங்கள்



படிப்பகம்

www.padippakam.com

குழப்பப்பட்டு திசை திருப்பப்படுகிறதல்லவா?

சிறீலங்கா அரசின் கொடூரங்களும், ஒடுக்கு முறைகளும் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும், என்பதும் அதற்காகப் போராட வேண்டியது அவசியமென்பதும் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயம். மனித உரிமைகள் சர்வதேசமயமாக்கப்பட்டமை, இப்போராட்டத்தில், நாம் மற்றவர்களையும், எம்மையும் அழித்துக் கொள்ளாமல், ஆக்கபூர்வமான முறையில் அணுகுவதற்கு உதவி செய்கின்றது. தற்கொலை செய்தோரை புகழ்ந்தேற்றுவ தென்பது, எமது சமுதாயம் எவ்வளவு அழிவுக் குள்ளாகியிருக்கின்ற தென்பதையே காட்டுகின்றது. பண்டைக் காலங்களில் ஒரு நகரம் எதிரியின் கைகளில் விழவிருக்கின்ற நேரத்தில், கொடூரமான எதிரிகளினால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படலாம் என்ற பயத்தினால் பெண்கள் தற்கொலை செய்வது வழக்கமாக இருந்தது. இது ஒரு நம்பிக்கையற்ற நிலையே ஒழிய வெற்றிக்காகன அறிகுறியல்ல. பெருந் தொகையான சிறார்களைத் தற்கொலைத் தாக்குதலுக்கு அனுப்பிவிட்டது, எமது போராட்டத்தின் மகிமையென பெருமிதம் கொள்வது வெற்றியின் அறிகுறியா? பலவிதமான சமுதாயக் காரணிகளால் வடபகுதியில் பல தசாப்தங்களாக, அசாதாரணமாக தற்கொலை வீதம் அதிகமாக உள்ளது. ஆனால் இப்பொழுது பொதுமக்கள் செய்துகொள்ளும் தற்கொலைகள் முன்னொருபொழுதும்ல்லாத வகையில் அதிகரித்துள்ளமையை அண்மைக்கால அறிக்கைகள் காட்டுகின்றன. 1991ம் ஆண்டின் ஒரு மாதத்தில் மட்டும், யாழ் வைத்திய சாலையில் 60 தற்கொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எத்தனை பதிவு செய்யப்படாமல் போகின்றது என்பது யாருக்கும் தெரியாது என்பது ஒரு கசப்பான உண்மையாகும். மேற்கூறப்பட்டது, முழுநிலையையும் எடுத்துக்காட்டாவிட்டாலும், சமுதாயத்தில் இருக்கும் நம்பிக்கை இழந்த நிலையை ஓரளவுக்காவது காட்டிநிற்கின்றது. அரசினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் விளைவாக கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை போன்றே இவ்வாறு தற்கொலை செய்து கொண்ட அறுபது பேரின் எண்ணிக்கையும் உள்ளது. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

கிரமமான முறையில் நடைபெறும் ஒரு வகையான இவ்வுள்ப் படுகொலைகள் அவதானிக்கப்படாமலே போகின்றன. 1983ம் ஆண்டு ஆடிக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு பயங்கர அனுபவங்களைப் பெற்று அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தடைந்தபோதும் கூட, மக்களிடம் தற்போதுள்ள நம்பிக்கையற்ற நிலை இருக்கவில்லை. அப்பொழுது மக்களிடம் தமிழ்சமுதாயம் ஒரு சமுதாயமாகக் கருதப்படும் என்ற நம்பிக்கையிருந்தது. மக்களிடையே ஒரு ஐக்கியம் இருந்தது. எல்லோரும் ஒன்றிணைந்து போராடி வென்றெடுக்க முடியும் என்ற இலட்சிய மனப்பான்மை இருந்தது. இன்றைய நிலையில் சிறுவர்களை ஆயுதபாணிகளாக்கும் நம்பிக்கையற்ற தற்கொலை நிலைமையே எஞ்சியுள்ளது. இது யாழ்ப்பாண சமுதாயத்திலிருந்த கெட்ட சுபாவங்களை மாத்திரம் பயன்படுத்திய அரசியலினால் ஏற்பட்ட நிலையென்றால் மிகையாகாது.

நாம் இத்தகைய வினாக்களை முன்வைப்பது போராட்டத்தைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே என்பதை யாவரும் புரிந்து கொள்ளவேண்டும். துரோகத்தையும், பொய்மையையும், கபடத்தனத்தையும் அடிப்படையாகக் கொண்டியங்கும் அரசியல் கலாச்சாரத்தைப் போலல்லாது, உண்மையும், நேர்மையும், திறந்த மனப்பான்மையும் ஒருபொழுதும் சமுதாயத்தைப் பலவீனப்படுத்தமாட்டாது. ஒன்றாக உழைப்பதே எம்மைப் பலப்படுத்தும். இவை தமிழர்கள் என்ற முறையில், அதற்கு மேலாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையில், நம்மை நாமே கேட்கவேண்டியதும் உயிர்வாழ்வதுடன் சம்பந்தப்பட்டதுமான கேள்வியாகும். இச் சந்தர்ப்பத்தில் ஊமைகளாக இருப்பது நம்மை நாமே அழித்துக்கொள்வதாகும். இன்றைய நிலையில் நம்மை வேறுயாரும் அழித்துவிடத் தேவையில்லை. நம்மை நாமே அழித்துக் கொள்ளும் மௌனமான நிலையே எம்மிடம் இருக்கின்றது.

இதே வேளையில் சிங்களமக்களின் பெயரால் அரசாங்கம் மேற்கொள்ளும் கொடூரமான செயல்கள் பற்றி சிங்களமக்களும் சில கேள்விகளை தம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும். சிங்களமக்கள்



படிப்பகம்

www.padippakam.com

குறுகிய மனப்பான்மை கொண்ட, பயந்த, திசையற்ற மக்களாக இருப்பதை விட, நேர்மையாயன நியாயமான மக்களாக இருந்தாலேயே எமக்கும் நன்மையிருக்கும்.

மனித உரிமைகள் சர்வதேசமயமாக்கப்பட்டமையே நாம், மக்கள் விடுதலையைப் பெறுவதற்கு ஒரு வலிமையான வழியாக உள்ளது என்பதனையே நாம் எடுத்துக்காட்ட விளைகின்றோம். நாம், நம்மை நாமே, அநியாயமாக அழித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. கடந்த இரு தசாப்தங்களாக மனிதஉரிமைகள் தொடர்பாக செய்யப்பட்ட வேலைகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். நம் நாட்டின் நிலை, உலகின் துர்அதிஷ்டவசமான பகுதிகளுடன் ஒப்படும் பொழுது, நம்பிக்கைக் குரியதாக இருக்கின்றது. நாம் எம் மக்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும், பொறுப்புணர்வுடன் கூடிய பரந்த மனப்பான்மையுள்ளவர்களாகவும் வளர்ந்திருப்போமாகில், எமது விடுதலையின் உண்மையான பெரும் பகுதியினைத் அடைந்தவர்களாக இருந்திருப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் வெளியிட்ட அறிக்கைகள் (ஆங்கிலத்தில்)

தை 1989. இலக்கம். 1. பக்கங்கள். 39.

பங்குனி 1989. இலக்கம். 2. பக்கங்கள் 66

கார்த்திகை 1989 இலக்கம். 3 பக்கங்கள் 86

ஆவணி. 1990. இலக்கம். 4.
"1990 ஆடி யுத்தம்" பக்கங்கள்.70

ஆவணி. 1990. விசேட அறிக்கை. 1.
"யாழ்ப்பாணத்தில் குண்டுத்தாக்குதல்", பக்கங்கள் 11.

புரட்டாதி. 1990 விசேட அறிக்கை. 2.
"ஒப்பரேசன் மேஜர்", பக்கங்கள். 22

புரட்டாதி. 1990. இலக்கம். 5.
"அழிவின் நிலைகொள்ளல்", பக்கங்கள் 67

படிப்பகம்

www.padippakam.com

ஐப்பசி. 1990 விசேட அறிக்கை. 3
"போரும் அதன் விளைவுகளும்." (அம்பாறை மாவட்டம்) பக்கங்கள். 110

மாசி. 1991. இலக்கம். 6.
"மனித அவலங்களும் அழிவிற்கான அரசியலும்". பக்கங்கள். 113.

வைகாசி. 1991 இலக்கம். 7.
"கருத்தமைவுகளின் மோதல்களும் தொடரும் அவலங்களும்". பக்கங்கள்.76.

ஆவணி. 1991 இலக்கம். 8.
"சட்டத்தினதும் மானிடத்தினதும் சீரழிவும் மொத்த யுத்தத்திற்கான முஸ்தீப்பும்." பக்கங்கள். 33

மாசி. 1992. இலக்கம். 9.
"அமைதி உருவாக்காளர்கள், போர் வெறியர்கள் மத்தியில் சிக்குண்ட மக்கள்".
பக்கங்கள். 37.

மார்கழி. 1992. சுருக்கம். 1.

தை 1993. இலக்கம் 10.
"ஆழமாகும் நம்பிக்கையீனப் பின்னணியில் தெரியும் சில ஒளிக்கீற்றுகள்".
பக்கங்கள். 78.

படிப்பகம்

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE : FRANCE

Published by U.T.H.R
Printed at C.R.C. Press - Ratnapitiya.

படிப்பகம்